
# அத்தியாயம் 4





## விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

### 4.1 பொதுநோக்கு


**உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியின் உதவியுடன் நுகர்வோர் விலை பணவீக்கத்தின் மிதமான அளவுடன் 2006ஆம் ஆண்டு ஆரம்பமானது. எனினும், குறிப்பாக எண்ணெய் விலைகள் அதிகரிக்கத் தொடங்கியதன் பின்பு ஏற்பட்ட அபிவிருத்திகள் இப்போக்கின் நேர்மாற்று விளைவுக்கு இட்டுச் சென்று இவ்வாண்டின் எஞ்சிய பகுதியில் பணவீக்கத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தின.** விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, கேள்வி அழுத்தம், நிருவகிக்கப்பட்ட விலைகளிலான அதிகரிப்புக்கள் மற்றும் வழங்கல் பக்கத்து இடையூறுகள் என்பவற்றின் இணைந்த விளைவுகளினால் ஏற்பட்டதாகும்.

மேலுமொரு கேள்விப்பக்கத்து அழுத்தம், 2006இல் அரசதுறை ஊழியர்களின் கூலி அதிகரிப்புக்களிலிருந்து தோன்றியது. வழங்கல் பக்கத்தில், தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட நெல்லின் அபரிமிதமான விளைச்சலுடன் உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியிலான விரிவாக்கம் ஆண்டின் ஆரம்பத்தில் விலை அழுத்தத்தை குறைக்க உதவிய போதிலும், இரண்டாம் அரைப்பகுதியில் குறிப்பாக மரக்கறிகள் மற்றும் துணை உணவுப் பயிர்களின் அறுவடை மற்றும் பகிர்ந்தளிப்புக்கு வானிலை தொடர்பான இடையூறுகள் உயர் விலைகளை ஏற்படுத்தின. இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து பல தடவைகளில் எண்ணெய் விலைகளின் மேல் நோக்கிய திருத்தத்தின் முக்கிய காரணமாக அதிகரித்துச் செல்லும் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிப்புச் செலவு விலைகள் மீது தொடர்ந்தும் அழுத்தத்தை ஏற்படுத்தின. எரிபொருள் விலைகளிலான அதிகரிப்புக்கள் விலை மட்டத்தை உயர்த்திய போதிலும், எதிர்கால பணவீக்கம் மீதான பொதுவான தாக்கம், பெரும்பாலும் பணவீக்கத்தை ஏற்படுத்தும் நிதியிடலூடாக ஈடுசெய்யப்படும் உதவு தொகைச் செலவைக் குறைக்கக் கூடியதாக அரசை இயலச் செய்து பணவீக்கத்தை குறைக்கும். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு இறக்குமதி செய்யபட்ட சில நுகர்வுப் பொருட்கள் மீதான தீர்வை அதிகரிப்புக்களும் இறக்குமதிச் செலவை அதிகரித்து இவ்வாண்டில் நுகர்வோர் விலைப் பணவீக்கத்துக்கு பங்களிப்புச் செய்தது.


**2006 காலப்பகுதியில் அரசதுறை உண்மைக் கூலிகள் அதிகரித்திருக்கையில் தனியார்துறை உண்மைக் கூலிகள் சுருக்கமடைந்தன.** மத்திய அரச ஊழியர்களின் பொதுவான பெயரளவுக் கூலிகள் 30.5 சதவீதத்தால் அதிகரித்து, உண்மை நியதிகளில் 15.1 சதவீத அதிகரிப்பை விளைவித்தது. 2006 சனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அரசால் அரசதுறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியால் உண்மைக்கூலி பேணப்பட்டது.

**2006 காலப்பகுதியில் தொழில்வாய்ப்பின்மை வீதம் 6.5 சதவீதத்திற்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது.** இது வேளாண்மை மற்றும் நிர்மாணத்துறைகளில் ஏற்பட்ட அதிகரித்த தொழில்வாய்ப்பிலும் மற்றும் சுய வேலைவாய்ப்பின் அதிகரித்த நிகழ்விலும் பிரதிபலிக்கப்படுகிறது. இளைஞர்களுக்கு கூடிய தொழில் வாய்ப்புக்களை வழங்கும் அரசின் முயற்சிகளும் தொழில்வாய்ப்பின்மையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உதவியது. எனினும் மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அரசியல் நிச்சயமற்றதன்மையின் விளைவாக 2006இல் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 4.1 விலைச்சுட்டெண்களில் ஆண்டுச்சராசரி மாற்றங்கள்




வரைபடம் 4.2 விலைச்சுட்டெண்களின் புள்ளிக்குப் புள்ளி மாற்றங்கள்




## 4.2 விலைகள்

### விலை அசைவின் காரணிகள்

**2005 இன் விலை மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2006 இல் பொதுவான விலை மட்டத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு கேள்வித் தூண்டல் மற்றும் செலவுத் தூண்டல் காரணிகள் இரண்டினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும்.** அதிகரித்துச் செல்லும் பணவீக்கம் 2006 இல் சகல விலைச் சுட்டெண்களால் பதிவு செய்யப்பட்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன் கொ.நு.விலை மற்றும் இ.நு.விலை முறையே 13.7 சதவீதத்தாலும் 9.5 சதவீதத்தாலும் அதிகரித்தன.

**கேள்விப்பக்கத்திலிருந்தான அழுத்தம், நாணய விரிவாக்கத்தைப் போலவே உயர் அரச செலவினம் மற்றும் கடன்பாடுகள் காரணமாக உயர்வீதத்தில் ஒதுக்குப் பணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் தோன்றியது.** இது நாணய விரிவாக்கத்துக்கு மிகவும் உணர்திறன்மிக்க பொதுவான பணவீக்கத்தின் பகுதியான மைய பணவீக்கத்தின்[1] அதிகரித்துச் செல்லும் போக்கை எடுத்துக் காட்டுகிறது.

**நாணய வளர்ச்சி ஆண்டிறுதியில் 17.8 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டது.** உயர் நாணய வளர்ச்சி, தனியார்துறை மற்றும் அரசு ஆகிய இரு பிரிவினருக்குமான உயர் கொடுகடன் விரிவாக்கத்தின் விளைவாக வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களாலேயே முழு அளவில் ஏற்பட்டது. தனியார்துறைக் கொடுகடன் உயர் வீதத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து, வர்த்தகம் செய்தல், உண்மைச் சொத்து மற்றும் வீடமைப்பு, குத்தகை மற்றும் நுகர்வு தொடர்பான பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவாக்கம் காரணமாக 2006 திசெம்பரில் 24.8 சதவீதத்தை அடைந்தது. அரசுக்கான தற்காலிக முற்பணங்களின் அதிகரிப்பு அளவுக்கு அதிகமான நாணய விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்ததுடன், இது கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்கத்தை மேலும் அதிகரித்தது. இது, கேள்வி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதில் புதுப்பித்த முயற்சிகளுக்கான தேவையை எடுத்துக் காட்டுகிறது.

**உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் வழங்கல் பக்கத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தின.** மோசமான வானிலை நிலைமைகளால் தூண்டப்பட்டு அறுவடைக் காலப்பகுதியில் வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக

[1] உயர் விலைத் தளம்பல்கள் மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளைக் கொண்ட பொருட்களை நீக்கிய பின் கணிக்கப்பட்டது.

## அட்டவணை 4.1 விலைச் சுட்டெண்களில் மாற்றங்கள்

| சுட்டெண் | சராசரிச் சுட்டெண் | | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006(அ) | திசெ2005/திசெ2004 | திசெ2006/திசெ2005(அ) | 2005/2004 | 2006/2005(அ) |
| கொநுவிசு | 3,632.8 | 4,055.5 | 4,610.8 | 8.0 | 19.3 | 11.6 | 13.7 |
| கொமாநுவிசு | 148.5 | 163.1 | 176.6 | 4.3 | 14.5 | 9.8 | 8.3 |
| அநுவிசு | 158.5 | 172.8 | 188.9 | 3.4 | 16.4 | 9.0 | 9.3 |
| மாத்தளை நுவிசு | 151.6 | 166.6 | 182.3 | 4.6 | 16.9 | 9.9 | 9.4 |
| மாத்தறை நுவிசு | 147.2 | 157.2 | 169.3 | 2.1 | 16.0 | 6.8 | 7.7 |
| இநுவிசு | 170.9 | 189.1 | 207.2 | 3.6 | 17.9 | 10.6 | 9.5 |
| மொவிசு | 1,889.0 | 2,105.9 | 2,351.6 | 1.7 | 17.3 | 11.5 | 11.7 |
| மொ.உ.உ.சுருக்கி | 183.6 | 201.8 | 222.6 | - | - | 9.9 | 10.3 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டின் பிற்பகுதியில் மரக்கறிகளின் விலைகள் கணிசமானளவில் அதிகரித்தன. சுனாமிக்குப் பின், மீன்பிடித்துறை அநேகமாக முழுமையாக மீட்சியடைந்த போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாதகமான நிலைமைகள் மற்றும் இடையூறுகள் என்பன மீனின் மொத்த விலையையும், சில்லறை விலையையும் உயர்த்தின. மீனின் விலைகளில் ஏற்பட்ட உயர்வின் பதிலீட்டுத் தாக்கம் காரணமாக இறைச்சி, முட்டைகள் மற்றும் கருவாட்டின் விலைகளும் அதிகரித்தன. வழங்கல் மற்றும் வெளிநாட்டுக் காரணிகள் காரணமாக, சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் செத்தல் மிளகாய் போன்ற ஏனைய முக்கிய உணவுப் பொருட்களின் விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. மேற்கூறிய விலை அபிவிருத்திகளுக்கு உதவிய ஏனைய பங்களிப்புக் காரணிகளாக உயர் போக்குவரத்துச் செலவினத்துடனான அதிகரித்த இடையீட்டு உள்ளீடுகளின் செலவுகள் விளங்கின.

**தீர்வைத் திருத்தங்கள் மற்றும் நாணய பெறுமானத் தேய்வுடன் இணைந்து உயர் பன்னாட்டு விலைகள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளை உயர்த்தின.** பன்னாட்டு எண்ணெய் விலைகள் 2005 இன் பீப்பா ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 53 உடன் ஒப்பிடுகையில் 2006 இல் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 64 இற்கு கிட்டத்தட்ட 22 சதவீதத்தால் அதிகரித்தமை உள்நாட்டு எரிபொருள் விலைகளின் திருத்தங்களுக்கு நிர்ப்பந்தித்தது. பன்னாட்டு உயர் பெற்றோலிய விலைகளுக்கு இசையும் வகையில் பெற்றோலுக்கான பதிலீடான எதனோலை உற்பத்தி செய்ய கரும்பு பயன்படுத்தப்பட்டதன் காரணமாக பன்னாட்டுச் சந்தையில் நிலவிய குறைந்த வழங்கல் காரணமாக சீனியின் உலக விலைகள் பெருமளவில் அதிகரித்தன. 2006 பெப்புருவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா மீது கிலோ கிறாம் ஒன்றுக்கு ரூ.10 கொண்ட மேலதிக சுங்கத் தீர்வையையும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான சுங்கத் தீர்வையை கிலோ கிறாம் ஒன்றுக்கு ரூ.9 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரித்தமையும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி விலைகளை உயர்த்தின. இவ்வாண்டு இறுதியில் வரவு செலவுத்திட்டம் 2007இல் அறிவிக்கப்பட்டவாறு, துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வை மற்றும் குறிப்பிட்ட உணவல்லாத பொருட்கள் மீதான கலால் தீர்வை என்பவற்றின் மேல் நோக்கிய திருத்தத்தாலும், இது மேலும் மோசமடைந்தது. மேலும் அதிகரித்த கப்பற் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கட்டணங்களும் 2006இல் இறக்குமதிச் செலவுக்கு அதிகரிப்பை ஏற்படுத்தின.

**தொடர்ச்சியாக நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள் 2006இல் விலை மட்டங்கள் அதிகரித்துச் செல்வதற்கு காரணமாகின.** இது, உள்நாட்டில் உற்பத்தி செய்த மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பொதுவான விலை மட்டங்களில் மேலும் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தது. எரிபொருள், மின்வலு, போக்குவரத்து, குடிவகை மற்றும் புகையிலை மீது குறிப்பிடத்தக்க விலைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2006 காலப்பகுதியில் உள்நாட்டு எரிபொருள்

## அட்டவணை 4.2 இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்

| விடயம் | | அலகு | இ.நு.வி.சு நிறை | விலை - ரூ | | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டுச் சராசரி | | | | | | ஆண்டுச் சராசரி | | ஆண்டு இறுதியில் | |
| | | | | 2004 | 2005 | 2006 (அ) | 2004 திசெ. | 2005 திசெ. | 2006 திசெ.(அ) | 2005/2004 | 2006/2005 | திசெ.2005/ திசெ. 2004 | திசெ. 2006/ திசெ. 2005(அ) |
| உள்நாட்டு | சிவப்புப்பச்சை அரிசி | கி.கி | 17.3 | 35.30 | 32.83 | 31.22 | 41.86 | 32.10 | 38.19 | -7.0 | -4.9 | -23.3 | 19.0 |
| | புழுங்கல் (உயர்தரம்) | கி.கி | | 34.03 | 31.75 | 31.49 | 39.29 | 33.65 | 37.95 | -6.7 | -0.8 | -14.4 | 12.8 |
| | கோறா (உயர்தரம்) | கி.கி | | 33.51 | 31.72 | 30.85 | 38.16 | 32.46 | 34.79 | -5.3 | -2.7 | -14.9 | 7.2 |
| | தேங்காய் (நடுத்தரம்) | காய் | 5.4 | 12.68 | 16.61 | 15.68 | 18.65 | 16.39 | 18.59 | 31.0 | -5.6 | -12.1 | 13.4 |
| | மீன் - கெளவல்ல | கி.கி | 1.4 | 240.41 | 263.74 | 308.15 | 248.10 | 275.60 | 333.66 | 9.7 | 16.8 | 11.1 | 21.1 |
| | அவரை | கி.கி | 1.3 | 56.35 | 69.40 | 76.14 | 53.56 | 73.64 | 101.97 | 23.2 | 9.7 | 37.5 | 38.5 |
| | கத்தரி | கி.கி | 0.9 | 35.55 | 42.06 | 47.74 | 51.70 | 45.76 | 71.20 | 18.3 | 13.5 | -11.5 | 55.6 |
| | முட்டைகள் | ஒன்று | 0.6 | 5.45 | 7.26 | 7.07 | 6.86 | 6.71 | 9.07 | 33.2 | -2.6 | -2.2 | 35.2 |
| இறக்குமதிகள் | சீனி | கி.கி | 3.4 | 37.51 | 41.94 | 60.22 | 38.70 | 43.66 | 65.31 | 11.8 | 43.6 | 12.8 | 49.6 |
| | பால்மா - அங்கர் | 400கி | 3.3 | 137.13 | 156.31 | 160.58 | 149.58 | 158.98 | 165.83 | 14.0 | 2.7 | 6.3 | 4.3 |
| | சிவப்புப்பருப்பு | கி.கி | 1.9 | 69.46 | 76.51 | 75.52 | 75.67 | 75.87 | 81.99 | 10.1 | -1.3 | 0.3 | 8.1 |
| | கோதுமை மா | கி.கி | 0.9 | 25.99 | 29.00 | 34.25 | 27.41 | 29.13 | 40.47 | 11.6 | 18.1 | 6.3 | 38.9 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.3** **நிருவகிக்கப்பட்ட விலைகளின் திருத்தம் 2005 மற்றும் 2006**

| விடயம் | அலகு | விலை (திசெ.) ரூ. | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | 2004 | 2005 | 2006 | 2005/2004 | 2006/2005 |
| சிகரட் (கோல்ட்லீவ்) | 1 | 9.00 | 10.50 | 11.00 | 16.7 | 4.8 |
| சிகரட் (பிறிஸ்டல்) | 1 | 7.50 | 9.00 | 9.50 | 20.0 | 5.6 |
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி.லீற் | 338.50 | 375.00 | 410.00 | 10.8 | 9.3 |
| அதிவிசேட சாராயம் | 750 மில்லி.லீற் | 290.00 | 345.00 | 360.00 | 19.0 | 4.3 |
| டீசல் | ஒரு லீற்றர் | 44.00 | 50.00 | 60.00 | 13.6 | 20.0 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர். | 25.50 | 30.50 | 48.00 | 19.6 | 57.4 |
| பெற்றோல் | ஒரு லீற்றர் | 70.00 | 80.00 | 92.00 | 14.3 | 15.0 |
| உலை எண்ணெய் (1000) | ஒரு லீற்றர் | 24.70 | 30.70 | 44.40 | 24.3 | 44.6 |
| உலை எண்ணெய் (1500) | ஒரு லீற்றர். | 24.30 | 30.30 | 43.30 | 24.7 | 42.9 |
| உலை எண்ணெய் (3500) | ஒரு லீற்றர். | 22.00 | 28.00 | 41.00 | 27.3 | 46.4 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணம் | அலகு வீச்சு 0-30 | 3.00 | 3.00 | 3.00 | 0.0 | 0.0 |
| | 31-60 | 3.70 | 3.70 | 4.70 | 0.0 | 27.0 |
| | 61-90 | 4.10 | 4.10 | 5.10 | 0.0 | 24.4 |
| | 91-180 | 10.60 | 10.60 | 12.10 | 0.0 | 14.2 |
| | > 180 | 15.80 | 15.80 | 17.30 | 0.0 | 9.5 |
| மின்சாரம் - நிலையான கட்டணம் | அலகு வீச்சு 0-30 | 30.00 | 30.00 | 60.00 | 0.0 | 100.0 |
| | 31-60 | 30.00 | 30.00 | 90.00 | 0.0 | 200.0 |
| | 61-90 | 30.00 | 30.00 | 120.00 | 0.0 | 300.0 |
| | 91-180 | 30.00 | 30.00 | 180.00 | 0.0 | 500.0 |
| | >180 | 30.00 | 30.00 | 240.00 | 0.0 | 700.0 |
| பேருந்துக் கட்டணம் | - | - | - | - | 15.0 | 16.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விலைகளின் சீராக்கம் மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்டமை பெற்றோல் மற்றும் தன்னியக்க டீசலின் விலைகளை முறையே 15 சதவீதத்தாலும், 20 சதவீதத்தாலும் உயர்த்தின. இறைத்துறை மோசமடைவதால் ஏற்படும் நீண்ட கால பணவீக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு அரசிடமிருந்தான உதவுதொகைச் சுமையை நீக்குவதற்கு எரிபொருள் விலைத் திருத்தங்கள் அத்தியாவசியமாக விளங்கின.

## விலைகளின் பருவகால மாறுபாடுகள்

**இலங்கையிலான நுகர்வோர் விலைகள், நு.வி.சுட்டெண்களின் அசைவுகளில் தெளிவாக பிரதிபலிக்கப்பட்டவாறு வேறுபட்ட பருவகாலத் தன்மைகளை வெளிப்படுத்துகின்றன.** அரிசி, மரக்கறிகள், தானியங்கள் மற்றும் ஏனைய துணை உணவுப் பயிர்கள் போன்ற வேளாண்மை உற்பத்திகளின் பருவகாலத்துக்கு இட்டுச் செல்லும் இரு பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் இணைந்த சிறுபோகம் (ஏப்பிறல் - ஓகத்து) மற்றும் பெரும்போகம் (செத்தெம்பர் - மாச்சு) என்ற இரண்டு பருவகாலங்கள் காணப்படுகின்றன. இதன்படி, பெப்புருவரியிலிருந்து மாச்சுக்கும் மற்றும் யூலையிலிருந்து ஓகத்துக்குமான காலப்பகுதிகளில் வரும் இரு முக்கிய அறுவடை பருவ காலங்களில் விலைகள் வீழ்ச்சியடைகையில் பொதுவாக அறுவடை காலப் பகுதிகளுக்கிடையே நு.வி.சுட்டெண்ணின் அசைவுகளில் காணப்பட்டவாறு விலைகள் மெதுவாக நகரத் தொடங்குகின்றன. இத்துடன், பருவ காலங்களில், குறிப்பாக ஏப்பிறல் மற்றும் திசெம்பரில் வரும் இரண்டு முக்கிய கலாச்சார மற்றும் சமய ரீதியான பண்டிகைக் காலங்களில் விலைகள் அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருக்கும். விலைகளின் இந்நடத்தை 2006இலும் தொடர்ந்தன. 2006இன் அறுவடை காலப்பகுதிகளில் மரக்கறிகளின் விலைகள் 1-43 சதவீத வீச்சினுள் வீழ்ச்சியடைந்திருக்கையில் அறுவடை காலப்பகுதிகளுக்கிடையே விலைகள் 1-52 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. இது போலவே, அரிசியைப் பொறுத்த மட்டில் தொடர்பான காலப்பகுதிகளில் விலைகள் 3-8 சதவீத வீச்சினுள் வீழ்ச்சியடைந்திருக்கையில் அதிகரிப்புக்கள் 1-10 சதவீத வீச்சினுள் காணப்பட்டன.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

**அலுவல்சார் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்களான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.விசு.) 2006 திசெம்பரில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 19.3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் ஆண்டிறுதியில் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 13.7 சதவீதம் கொண்ட உச்ச நிலையை அடைந்தது.** கொ.நு.வி.சுட்டெண்ணின் துணைச் சுட்டெண்களினுள், மொத்தக் கூடையில் 62 சதவீதமளவான நிறையைக் கொண்டிருக்கும் உணவுத் துணைச் சுட்டெண் பொதுவான சுட்டெண்ணில் பலமான ஆதிக்கத்தைக் கொண்டிருந்தது. மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக விறகின் அதிகரித்த விலைகளுடன் இணைந்து இவ்வாண்டில் மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் மற்றும் வெளிச்சம் துணைச் சுட்டெண் 2006 இல் விரைவான வீதத்தில் அதிகரித்தது. பல்வகைச் சுட்டெண்ணின் அதிகரிப்பு பெரும்பாலும் போக்குவரத்துடன் தொடர்புடைய பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டதாலும் மற்றும் குடிவகை, புகையிலை, மருந்து மற்றும் கல்வி என்பவற்றின் விலை அதிகரிப்புக்களாலும் உந்தப்பட்டது.

**மிக அண்மைக் காலத்திலான நுகர்வுக் கூடையுடன் (அடிப்படை ஆண்டு 1995/97) பரந்தளவான புவியியற் பரப்பு உள்ளடக்கத்தைக் கொண்ட இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் (இ.நு.வி.சு.) அதே போக்கைப் பின்பற்றி 2006 திசெம்பரில் 17.9 சதவீதம் கொண்ட புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பையும் 9.5 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பையும் பதிவு செய்தது.** இ.நு.வி.சுட்டெண்ணில் 71.2 சதவீத நிறையைக் கொண்டு ஆதிக்கம் செலுத்தும் செலவினத் தொகுதியான உணவு, பானங்கள் மற்றும் புகையிலைத் தொகுதி 2006 திசெம்பரில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 17.7 சதவீதத்தால் அதிகரித்து, மொத்த அதிகரிப்புக்கு ஆகக்கூடிய பங்களிப்பை ஏற்படுத்தியது. இ.நு.வி.சுட்டெண் கூடையில் இரண்டாவது ஆகக்கூடிய நிறையைக் கொண்டிருக்கும் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் வகை என்பன அதன் ஆகக்கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்து பொதுவான சுட்டெண்ணுக்கான அதிகரிப்புக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தது. போக்குவரத்து துணைச் சுட்டெண்ணும் இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட பேருந்துக் கட்டணத்தின் விலைத் திருத்தம் மற்றும்,

பெற்றோல் மற்றும் டீசலின் மேல் நோக்கிய விலைத் திருத்தம் என்பவற்றால் சார்பு ரீதியில் உயர் அதிகரிப்பைப் பதிவு செய்தது. அதே நேரம் ஏனைய துணைச் சுட்டெண்களிலிருந்து 2006இன் ஒட்டு மொத்த அதிகரிப்பிற்கு 5 சதவீதத்திற்கும் குறைவான மிதமான பங்களிப்புகளை வழங்கியிருந்தது.

**அனைத்து பிரதேச நு.வி. சுட்டெண்களும் கொ.நு.வி.சு. மற்றும் இ.நு.வி.சு. என்பவற்றின் அதே நடத்தையை எடுத்துக் காட்டிய போதிலும், இவை கொ.நு.வி.சுட்டெண்ணை விட மெதுவான அதிகரிப்புக்களைக் காட்டின.** இம்மெதுவான அதிகரிப்பு, அநுராதபுரம் (அ.நு.வி.சு.), கொழும்பு (கொ.மா.நு.வி.சு.), மாத்தளை (மாத்தளை நு.வி.சு.) மற்றும் மாத்தறை (மாத்தறை நு.வி.சு.) மாவட்டங்களுக்கான நான்கு பிரதேச நு.வி.சுட்டெண்களின் அமைப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட நிறை அமைப்பிலான வேறுபாடுகள் காரணமாகவும், பிரதேச விலைகளிலான மாறுபாடுகள் காரணமாகவும் ஏற்பட்டன. சகல நான்கு பிரதேச சுட்டெண்களும் 7.7 சதவீதத்திலிருந்து 9.4 சதவீதம் வரையான வீச்சில் குறைவான ஆண்டுச் சராசரி அதிகரிப்புக்களைப் பதிவு செய்திருக்கையில், மாத்தளை நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகக் குறைந்த அதிகரிப்பான 7.7 சதவீதத்தைப் பதிவு செய்தது. கொ.மா.நு.வி.சு. இன் 58 சதவீத நிறையுடன் ஒப்பிடுகையில் அநுராதபுரம் நு.வி.சு மற்றும் மாத்தளை நு.வி.சு. இன் உணவுத் துணைத் தொகுதியிலான சார்பு ரீதியிலான 64 சதவீதமானளவு உயர் நிறைகள் காரணமாக பணவீக்கம் முக்கியமாக உணவுப் பொருட்கள் மூலம் தூண்டப்படுவதால் அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களிலான பணவீக்கம் கொழும்பு மாவட்டத்தை விட உயர்வாக இருப்பதற்குப் பங்களிப்புச் செய்தது. அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க ஆதிக்கத்தை ஏற்படுத்தும் மோசமான வானிலை நிலைமைகளுக்கு இசையும் வகையில் கொழும்பு மாவட்டத்தின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2006 இன் நான்காம் காலாண்டில் இவ்விரு மாவட்டங்களில் மரக்கறிகளின் விலைகள்-. விரைவாக அதிகரித்தன. இதற்கு முக்கிய காரணமாக கொழும்புடன் ஒப்பிடுகையில் உற்பத்தி செய்யும் பிரதேசங்களில், வழங்கல் மாற்றங்களுக்கு விலைகளின் உயர்ந்தளவான உணர்ச்சித் திறனை குறிப்பிடலாம். ஏனெனில், நாட்டின் முக்கிய பகிர்ந்தளிக்கும் நிலையமாக கொழும்பு விளங்குவதால் இது நாட்டின் சகல பாகத்திலிருந்தும் வழங்கலைப் பெற்றுக் கொள்கிறது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

**முதலாந் தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (மொ.வி.வி.சு), நு.வி.சுட்டெண்களுக்கான குறிப்பாக இ.நு.வி.சுட்டெண்ணுக்கான நடத்தை போலவே செயலாற்றியது.** மொ.வி.வி. சுட்டெண்ணிலான அசைவுகள் அநேகமாக உற்பத்தியாளர் மட்டத்திலான விலை அபிவிருத்திகளை பிரதிநிதித்துவப்படுத்துவதால், நாட்டின் எதிர்கால பணவீக்கத்தை மதிப்பிடுவதற்கு பயனுள்ள குறிகாட்டியாக இது அமையும். மொ.வி.வி.சுட்டெண் 2005 இல் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைக் கொண்டிருந்ததுடன் திசெம்பரில் ஏற்பட்ட புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பான 17.3 சதவீத அதிகரிப்பினை இவ்வாண்டிற்கான 11.7 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி பணவீக்கத்தினையும் காட்டி 2006 சனவரியின் பின்பு தொடர்ச்சியாக அதிகரிக்கத் தொடங்கியது.

**கிட்டத்தட்ட 68 சதவீத பங்கைக் கொண்டிருக்கும் செல்வாக்கு மிக்க உணவுத் துணைத் தொகுதியின் ஆண்டுச் சராசரி மாற்றம் பொதுவான சுட்டெண்ணின் நடத்தையில் ஆதிக்கம் செலுத்திய போதிலும் 2006 இல் சார்பு ரீதியில் குறைவான வீதத்தில் அதிகரித்தது.** இவ்வாண்டில் சில்லறை மட்டத்திலான விலைகளைப் பாதித்த காரணிகள் உள்நாட்டு மற்றும் இறக்குமதிப் பொருட்களின் மொத்த விற்பனை மட்டத்திலான விலைகளிலும் அதே மாதிரியான தாக்கத்தைக் கொண்டிருந்தன. அத்துடன், பன்னாட்டுச் சந்தையில் தேயிலை மற்றும் மிளகு போன்ற குறிப்பிட்ட முக்கிய ஏற்றுமதிகளின் உயர் விலைகள் இத்துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. இதேவேளை, மொத்த நிறையில் 20 சதவீதத்துக்கும் கூடுதலாக வகைகூறும் நெல் மற்றும் தெங்கு உள்ளடங்கலான சில பொருட்களில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிகள் விலைத் தாக்கத்தை ஓரளவிற்கு குறைப்பதற்கு உதவின. இரண்டாவது ஆகக்கூடிய நிறையைக் கொண்ட பெற்றோலிய துணைச் சுட்டெண் 27 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு உள்நாட்டு எரிபொருள்களின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்கள் காரணமாகின. இவ்வாண்டில், 33 சதவீதத்தால் அதிகரித்த பல்வகைத் துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்பு முக்கியமாக கேள்வியால் உந்தப்பட்ட இறப்பரின் உயர் பன்னாட்டு விலைகளால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு, சுட்டெண்ணில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் உயர் விலைகள் மற்றும் உயர் கப்பற் கட்டணங்கள் காரணமாக ரயர் மற்றும் மின்கலம் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, போக்குவரத்துக் கருவி துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 19 சதவீதம் கொண்ட ஆண்டுச்சராசரி கொண்ட அதிகரிப்பு மூலம் புலனாகிறது. 2006இல் வெறியக் குடிவகைகள் மீதான உயர் கலால் தீர்வையின் தாக்கம் வெறியக் குடிவகை துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 11 சதவீத அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. இதற்கு மாறாக, உதவு தொகை வழங்கப்பட்டதன் விளைவாக, வளமாக்கியின் மொத்த விற்பனை விலையிலான வீழ்ச்சி உயர்விலை அழுத்தத்தை ஓரளவிற்கு குறைக்க உதவும்.

**பொருட்களின் உற்பத்தியின் தோற்ற இடத்தின் அடிப்படையில் இறக்குமதித் துணைத் தொகுதி ஆகக்கூடிய அதிகரிப்பையும் அதனைத் தொடர்ந்து உள்நாட்டுத் தொகுதியும் அதிகரிப்பை பதிவு செய்திருக்கையில் இவ்வாண்டில் ஏற்றுமதிகள் சார்பு ரீதியில் குறைந்த மட்டத்தில் அதிகரித்தன.** முக்கிய இடைநிலை இறக்குமதிப் பொருளான பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் முக்கிய உணவு பொருட்கள் மருந்தின் உயர் பன்னாட்டு விலைகள், மொத்த விற்பனை விலைச் சுட்டெண் கூடையில் கிட்டத்தட்டட 27 சதவீத நிறையைக் கொண்ட இறக்குமதிகள் துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாக விளங்கின. 50 சதவீதத்துக்கும் கூடுதலான பங்கைக் கொண்டிருக்கும், உள்நாட்டு தொகுதி குடிவகை, புகையிலை, ரயர்கள் மற்றும் கட்டடவாக்கப் பொருட்கள் போன்ற உணவு மற்றும் உணவல்லாப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் அதிகரிப்புக்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு கிட்டத்தட்ட 11 சதவீதத்தால் அதிகரித்தது. 2005ஐ விட குறைந்த வீதத்தில் அதிகரித்த ஏற்றுமதிகள் துணைத் தொகுதி முக்கியமாக தெங்கு மற்றும் கொக்கோவின் குறைந்த விலைகளால் செல்வாக்குச் செலுத்தப்பட்டன.

**முடிவுப் பயன்பாட்டின் வகைப்படுத்தலின் கீழ் நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீடு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்களில் முதலீட்டுப் பொருட்களே விலை மட்டங்களிலான அதிகரிப்புக்கு முக்கிய பங்களிப்புக் காரணிகளாக விளங்கின.** இத்தொகுதி, முன்னைய ஆண்டின் 11 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சராசரியாக 25 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் அதிகரித்தது. புகையிலை மீது விதிக்கப்பட்ட கலால் தீர்வை, உயர் எரிபொருள் விலைகள், இறப்பருக்கான உயர் ஏற்றுமதி விலைகள், அதிகரித்த ரயர் விலைகள் மற்றும் கோதுமைத் தானியத்தின் உயர் இறக்குமதி விலை என்பன இடைநிலைப் பொருட்களின் விலைகளிலான அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. முக்கியமாக உணவுப் பொருட்களை உள்ளடக்கி 71 சதவீதத்துக்கும் கூடுதலான செல்வாக்குச் செலுத்தும் பங்கைக் கொண்டிருக்கும் நுகர்வோர் துணைத் தொகுதி அநேகமாக உணவுத் துணைத் தொகுதியைப் போலவே அசைந்து இவ்வாண்டில் இதே மாதிரியான அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனினும், சார்பு ரீதியில் குறைவான பங்கைக் கொண்டிருக்கும் முதலீட்டுத் துணைத்தொகுதி 30 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. வெளிநாடுகளால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் அமுலாக்கத்துடனும் சுனாமி நிர்மாணப் பணியிலான மேலதிக விரிவாக்கத்துடனும் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட

கட்டடவாக்கப் பொருட்களுக்கான தொடர்ச்சியான கேள்வி முதலீட்டுப் பொருட்களில் கேள்விப் பக்கத்திலான அழுத்தத்தை ஏற்படுத்தியது. உயர் இறக்குமதி விலைகளால் எழும் உள்நாட்டு உற்பத்தியின் உயர் செலவு போன்ற உள்நாட்டில் கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் பணிகளின் உயர் செலவுக்கு மேலதிகமாக கட்டடப் பொருட்களின் உயர் போக்குவரத்துக் கட்டணங்கள் இவ்வதிகரிப்புக்கு பகுதியளவில் பங்களிப்புச் செய்தன. மேலும், சுற்றாடல் கரிசனைகள் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மண், செங்கல் மற்றும் கூரை ஓடுகள் போன்ற குறிப்பிட்ட கட்டடவாக்கப் பொருட்களின் உற்பத்தியை மோசமாகப் பாதித்து அவற்றின் வழங்கலை மட்டுப்படுத்தின.

### மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

**பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சகல பொருட்களினதும் விலை மாற்றங்களை அளவிடும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி 2005இன் 9.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீதத்தால் அதிகரித்தது.** பணவீக்கத்தின் அதிகரித்துச் செல்லும் போக்கு கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் காணப்படுகையில் வேளாண்மைத்துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தில் அதிகரித்தது. பணிகள் துறை ஆகக் கூடிய அதிகரிப்பான 11.1 சதவீதத்தைப் பதிவு செய்திருக்கையில் கைத்தொழில்துறை 2005 இன் 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் 10.3 சதவீதத்தால் அதிகரித்தது.

## 4.3 கூலிகள்

**தொழிலுக்கமர்த்தப்பட்டோரின் குடித்தொகை, பணம் செலுத்தப்பட்ட ஊழியர்கள், தொழில்தருநர்கள், சொந்தத் தொழிலில் ஈடுபடும் வேலையாட்கள் மற்றும் பணம் செலுத்தப்படாத குடும்ப வேலையாட்களை உள்ளடக்குகிறது.** பணம் செலுத்தப்பட்ட ஊழியர் வகை அரசதுறை, முறைசார் தனியார்துறை மற்றும் முறைசாரா தனியார்துறை ஆகிய மூன்று துறைகளை உள்ளடக்கியுள்ளது. அரச துறையிலுள்ள கூலிகள் பெருமளவில் அரசால் தீர்மானிக்கப்படுகிறது. முறைசார் தனியார்துறை ஊழியர்களைப் பொறுத்தமட்டில் கூலிகளை சரி செய்யும் பொறிமுறை வடிவங்களை உள்ளடக்குகிறது. அவை முத்தரப்புத் தீர்மானம், கூட்டுப் பேரம், ஊதியங்கள் நியாயச் சபைகள், தொழில்தருநரின் தன்னிச்சையான தீர்மானங்கள் மற்றும் அரச பணிப்புரைகளால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் என்பனவாகும். முறைசாராத் தனியார் துறையில் கூலிகள் அநேகமாக சந்தையிலான கேள்வி மற்றும் வழங்கல் நிபந்தனைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. 2006இல் பொதுவான பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டைவிட விரைவாக வளர்ச்சியடைந்தன.

### அரச துறைக் கூலிகள்[2]

**அரசு 2006 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் ஒரு தொகுதி வரைவிலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு சகல பதவிகளையும் பணிகளையும் மீள்வகைப்படுத்துவதன்/ மீள்தொகுதியாக்குவதன் மூலம் அரச பணிக்காக புதிய சம்பள அமைப்பை நடைமுறைப்படுத்தியது.** இதன்படி, சகல அரச ஊழியர்களும் சகல படிகளும் உள்ளடங்கலாக புதிய சம்பளத்திட்டத்துக்கும், 2005 திசெம்பரில் செலுத்தப்பட்ட சம்பளங்களுக்கும் இடையேயான வேறுபாட்டின் அடிப்படையில் 2006 சனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 50 சதவீத சம்பள அதிகரிப்பை ஆரம்பத்தில் பெற்றனர். வேறுபாட்டின் எஞ்சிய 50 சதவீதம் 2007 சனவரியிலிருந்து செலுத்தப்படும்.

**அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படிகளின் கொடுப்பனவுக்கான புதிய முறைமையும் 2006 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு நடைமுறைப் படுத்தப்பட்டது.** இதன்படி, வாழ்க்கைச் செலவுப்படி ஒவ்வொரு ஆண்டின் யூன் 30 மற்றும் திசெம்பர் 31 இல் முடிவடையும் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்காக திருத்தப்படும். சகல அரச ஊழியர்களுக்கும் ரூ.1,000 கொண்ட வாழ்க்கைச் செலவுப்படியின் ஆரம்பக் கொடுப்பனவு 2006 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டதுடன் (பொது நிருவாக சுற்றுநிருபம் இல. 12/2006) இது 2006 யூலை 01 இலிருந்து ரூ.1,375 இற்கு அதிகரிக்கப்பட்டது. மேற்கூறிய அதிகரிப்புக்களின் இணைந்த விளைவாக அரச துறையின் சகல வகைகளினதும் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியதுடன், நிறைவேற்றுத்தரமல்லாத அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்கள் என்போருக்கான அதிகரிப்பு 2006இல் 26-31 சதவீத வீச்சினுள் காணப்பட்டது. இப் பெயரளவு கூலி அதிகரிப்புக்கள் பணவீக்கத்துக்காக சீராக்கம் செய்யப்பட்ட போது, அவர்களின் உண்மைக்கூலிகள் 12-16 சதவீத வீச்சினுள் அதிகரித்தன.

### முறைசார் தனியார்துறைக் கூலிகள்[3]

**முறைசார் தனியார் துறையிலுள்ள வேலையாட்களின் பொதுவான ஆகக்குறைந்த பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2006இல் 2 சதவீதத்தால் அதிகரித்தன.** வேளாண்மை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள வேலையாட்களின் கூலிகள் 1 - 3 சதவீத வீச்சினுள் அதிகரித்திருக்கையில் பணிகளுக்கான கூலிகள் தொடர்ந்து மாற்றமின்றிக் காணப்பட்டன. முறைசார் தனியார் துறையிலான கூலி அதிகரிப்புக்கள், தனிப்பட்ட ஒப்பந்தங்கள், கூட்டு உடன்படிக்கைகள், தொழில் தருநர்களால் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான தீர்மானங்கள் மற்றும் கூலிச் சபைகளின் ஆகக் குறைந்த கூலித் தீர்மானங்கள் என்பவற்றால் பெறும் கூலி அதிகரிப்புக்களால் செல்வாக்குச் செலுத்தப்பட்டன. இத்துறையிலுள்ள ஊழியர்கள் 2005 இல் அனுபவித்ததைப் போன்றே 2006 இலும் அவர்களது ஆகக் குறைந்த உண்மைக் கூலிகளில் இழப்புக்குள்ளானார்கள். எனினும், ஆகக் குறைந்த கூலிச் சுட்டெண்கள் இத்துறைகளிலுள்ள முகாமைத்துவ மற்றும் தொழில்சார் நிபுணத்துவ வகையினரால் உழைக்கப்படும் கூலிகளை உள்ளடக்காததால், இந்த ஆகக் குறைந்த கூலிச்சுட்டெண்களால் பிரதிபலிக்கப்பட்டதைவிட உண்மையான நிலைமை வேறுபட்டதாக இருக்கக்கூடும்.

### முறைசாராத் தனியார்துறைக் கூலிகள்[4]

**முறைசாரா தனியார்துறை 2006 இலான கூலிவீதங்களில் சிறியளவிலான முன்னேற்றத்தை அனுபவித்தது.** இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை, 2006 இல் வேளாண்மைத் துறையிலான

**அட்டவணை 4.4 மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும் துறை ரீதியான சுருக்கியும்**

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2004 | 2005(அ) | 2006(ஆ) | 2005/2004 | 2006/2005 (ஆ) |
| வேளாண்மை | 182.3 | 202.4 | 217.9 | 11.0 | 7.7 |
| கைத்தொழில் | 185.9 | 202.6 | 223.4 | 9.0 | 10.3 |
| பணிகள் | 183.0 | 201.2 | 223.6 | 10.0 | 11.1 |
| மொ.உ.உ | 183.6 | 201.8 | 222.6 | 9.9 | 10.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

[2] அரசதுறை, இரு துணைத்துறைகளான அரச (மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சித்துறைகள்) மற்றும் அரசுசார் (அரச கூட்டுத்தாபனங்கள், அரச சபைகள் மற்றும் அரச மேலாண்மைச் சபைகள்) துறைகளைக் கொண்டுள்ளது.

[3] முறைசார் தனியார்துறை, பொதுவான ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் தனியார்துறை நிறுவனங்களையோ அல்லது தொழில் ஆணையாளரின் ஒப்புதலுடன் அவற்றின் சொந்த சேமலாப நிதியங்களைப் பேணும் தனியார்துறை நிறுவனங்களையோ உள்ளடக்கும்.

[4] அரச துறை மற்றும் முறைசார் தனியார் துறை தவிர்ந்த ஏனைய அனைத்து ஊழியர்களையும் முறைசாரா தனியார் துறை உள்ளடக்குகிறது.

## அட்டவணை 4.5 கூலிவீதச் சுட்டெண்கள்

(திசெம்பர் 1978=100)

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | | | சதவீத மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | | உண்மையான | | | பெயரளவு | | | உண்மையான | | |
| | 2004 | 2005 | 2006(அ) | 2004 | 2005 | 2006(அ) | 2004 | 2005 | 2006(அ) | 2004 | 2005 | 2006(அ) |
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 1,872.1 | 2,417.5 | 3,155.6 | 123.3 | 142.7 | 164.2 | 22.8 | 29.1 | 30.5 | 14.0 | 15.8 | 15.1 |
| நிறைவேற்றுத்தரமல்லா | 1,709.0 | 2,178.4 | 2,853.8 | 112.5 | 128.6 | 148.5 | 21.2 | 27.5 | 31.0 | 12.6 | 14.3 | 15.5 |
| சிற்றூழியர்கள் | 2,039.5 | 2,672.4 | 3,474.1 | 134.3 | 157.8 | 180.8 | 24.6 | 31.0 | 30.0 | 15.7 | 17.5 | 14.6 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 1,428.4 | 1,818.6 | 2,304.2 | 94.1 | 107.4 | 119.9 | 21.0 | 27.3 | 26.7 | 12.4 | 14.1 | 11.7 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | | | | | | | |
| அனைத்து வர்த்தக்திலுள்ள கூலிநிர்ணயசபை | 1,233.0 | 1,329.7 | 1,358.2 | 81.3 | 78.5 | 70.7 | 2.3 | 7.8 | 2.1 | -4.8 | -3.5 | -9.9 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 1,397.7 | 1,527.4 | 1,567.1 | 92.2 | 90.2 | 81.6 | 1.1 | 9.3 | 2.6 | -5.9 | -2.3 | -9.5 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 1,044.1 | 1,078.4 | 1,090.7 | 68.9 | 63.7 | 56.8 | 3.4 | 3.3 | 1.1 | -3.7 | -7.6 | -10.8 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 751.0 | 779.7 | 779.7 | 49.5 | 46.0 | 40.6 | 10.8 | 3.8 | 0.0 | 2.9 | -7.0 | -11.8 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: தொழில் திணைக்களம்

பெயரளவிலான நாளாந்தக் கூலிகள் 8-13 சதவீத வீச்சினுள் அதிகரித்தமையையும் தேயிலை மற்றும் இறப்பர் துறைகளிலுள்ள வேலையாட்களின் கூலிகள், இவ்வாண்டில் தேயிலை மற்றும் இறப்பரின் முன்னேற்றகரமான விலைகள் காரணமாக சார்பு ரீதியில் உயர்வடைந்தமையையும் காட்டியது. எனினும், சகல வேளாண்மைத்துறை வேலையாட்களின் உண்மைக்கூலிகள் முன்னைய ஆண்டின் 6.6-12.9 சதவீத வீச்சிலான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.3-5.4 சதவீத வீச்சினுள் மேலும் வீழ்ச்சியடைந்தன. கட்டடவாக்க வேலையாட்களுக்கான கேள்வி 2006 இலும் தொடர்ந்து அதிகரித்ததால் கட்டடவாக்கத்துறைப் பெயரளவுக் கூலிகள் 12-13 சதவீத வீச்சினுள் அதிகரித்தன. எனினும், பணவீக்கத்துக்கு சீராக்கப்பட்ட போது அவர்களது உண்மைக் கூலிகளும் இவ்வாண்டில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2006இல் நடுவாண்டுக் குடித்தொகை 19.9 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2005 உடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** சகல மூன்று வகையான வயதுடையோரின் (15 வயதுக்குக் குறைவானோர், 15-54 வயதுடையோர் மற்றும் 55 வயதும், அதற்குக் கூடிய வயதுடையோர்) குடித்தொகை வளர்ச்சி வீதங்கள் நடுவாண்டுக் குடித்தொகை வளர்ச்சி வீதத்தை ஒத்ததாகவே விளங்கியது. மக்களின் வெளிச் செல்லல் காரணமாக

## அட்டவணை 4.6 துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்த கூலிகள் (அ)

| துறை | நாளாந்த கூலிகளின் ஆண்டுச்சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான | |
| | 2004 | 2005 | 2006 (ஆ) | 2005 | 2006 (ஆ) | 2005 | 2006 (ஆ) |
| **1. வேளாண்மைத்துறை** | | | | | | | |
| **தேயிலை** | | | | | | | |
| ஆண | 304 | 300 | 333 | -1.3 | 11.2 | -12.9 | -2.5 |
| பெண் | 218 | 217 | 234 | -0.5 | 8.4 | -12.1 | -5.3 |
| **இறப்பர்** | | | | | | | |
| ஆண் | 304 | 305 | 335 | 0.8 | 9.7 | -10.8 | -4.0 |
| பெண் | 229 | 230 | 249 | 1.3 | 8.3 | -10.3 | -5.4 |
| **தெங்கு (இ)** | | | | | | | |
| ஆண் | 361 | 378 | 411 | 5.0 | 8.6 | -6.6 | -5.1 |
| **நெல்** | | | | | | | |
| ஆண் | 334 | 343 | 375 | 2.4 | 9.8 | -9.2 | -3.9 |
| பெண் | 256 | 256 | 289 | -0.1 | 13.4 | -11.7 | -0.3 |
| **2. கட்டடவாக்கத்துறை** (இ) | | | | | | | |
| **மரவேலையாள்** | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 505 | 542 | 616 | 7.4 | 13.4 | -4.2 | -0.3 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 349 | 353 | 398 | 1.3 | 12.7 | -10.3 | -1.0 |
| **கொத்தனார்** | | | | | | | |
| முதன்மை கொத்தனார் - ஆண் | 499 | 537 | 608 | 7.6 | 13.1 | -4.0 | -0.6 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 347 | 353 | 394 | 1.8 | 11.8 | -9.8 | -1.9 |

(அ) கூலித்தகவல்கள் 93 நிலையங்களிலிருந்தான மாதாந்த கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) தெங்கு மற்றும் நிருமாணத்துறைகளில் பெண் பற்கேற்பு குறைவு

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சிகளைப் பதிவு செய்த யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தவிர்ந்த சகல மாவட்டங்களும் குடித்தொகையிலான விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தன. கொழும்பு, வவுனியா, கண்டி, கம்பகா, இரத்தினபுரி, குருணாகல், பதுளை மற்றும் காலி மாவட்டங்களிலான குடித்தொகையில் ஏற்பட்ட உயர் அதிகரிப்புக்கள் பொதுவான வளர்ச்சியின் 63 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தன.

## தொழிற்படை

**நாட்டிலுள்ள தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலற்ற நிலை என்பன தொகைமதிப்பு, புள்ளிவிபரத்திணைக்களத்தால் நடாத்தப்படும் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டால் மதிப்பிடப்படுகின்றது**[5]. எனினும், சுனாமியால் பாதிப்படைந்த பிரதேசங்களில் மாதிரிக்கட்டமைப்பு இல்லாததால் 2005இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் காலாண்டு தொழிற்படை அளவீட்டை நடத்த முடியாத போதிலும், முழு நாட்டையும் உள்ளடக்கத்தக்க விசேட தொழிற்படை அளவீடு 2005 ஓகத்தில் நடத்தப்பட்டது. காலாண்டு தொழிற்படை அளவீடு 2006 இல் நடத்தப்பட்ட போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய பாதகமான பாதுகாப்பு நிலைமை காரணமாக இம்மாகாணங்கள் உள்ளடக்கப்படவில்லை. எனவே, 2005 மற்றும் 2006 இற்கான ஒப்பீட்டளவிலான தரவுத் தொடர்கள் இல்லாமையால், ஆகப் பிந்திக் கிடைக்கக்கூடிய அளவீடான 2006 இன் காலாண்டு தொழிற்படை அளவீடு மற்றும் விசேட தொழிற்படை அளவீடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்காத வகையில் சீராக்கப்பட்டதுடன், மிகக்கூடிய அளவுடைய மதிப்பீடாக இப்பகுப்பாய்வு பயன்படுத்தப்படும். இதன்படி, தொழிற்படை 2005 ஓகத்தின் 7.3 மில்லியனிலிருந்து 2006 இன் மூன்றாம் காலாண்டில் 7.1 மில்லியன் தொழில் புரிவோரையும், 0.5 மில்லியன் தொழில் அற்றோரையும் உள்ளடக்கிய 7.6 மில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது. தொழிற்படை பங்கேற்பு வீதம் 2005 ஓகத்தின் 3.9 சதவீதத்திலிருந்து 2006இல் 51.2 சதவீதத்துக்கு அதிகரித்தது[6].

## தொழில்நிலை

**காலாண்டு தொழிற்படை அளவீட்டின் படி, தொழில் புரியும் ஆட்களின் எண்ணிக்கை 2005 ஓகத்திலிருந்தான 6.8 மில்லியனிலிருந்து 2006இல் 7.1 மில்லியனுக்கு 4.7 சதவீதத்தால் அதிகரித்தது.** தொழில் புரியும் ஆளொருவர் என்பவர் கொடுப்பனவுக்காக, இலாபத்துக்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக (கொடுப்பனவின்றி) அளவீட்டுக்கு முந்திய வாரத்தில் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்கு மேல் தொழில் செய்தவர் என காலாண்டு தொழிற்படை அளவீடு வரைவிலக்கணம் செய்கிறது. நோய், மோசமான காலநிலை மற்றும் தொழில் தகராறு காரணமாக தற்காலிகமாக வேலைக்குச் சமூகமளிக்காத ஊழியர்களும் தொழில் செய்வோராகவே கருதப்படுகின்றனர்.

**தொழில் நிலையிலான அதிகரிப்பு, வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய சகல மூன்று துறைகளிலும் பரந்து காணப்பட்டது.** கைத்தொழில்துறை ஆகக்கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்து சாதகமான வேளாண்மைப் பொருட்களின் விலைகளுடன் இணைந்து பல உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக அரசின் விரிவடைந்த கொள்கைகள் வேளாண்மைத் துறையிலான தொழில்நிலை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தன. எனினும், பணிகள் துறையிலான தொழில்நிலை, இக்காலப்பகுதியில் ஆகக்கூடிய துறைவாரியான வளர்ச்சியைப் பதிவு செய்த போதிலும் 0.4 சதவீதம் கொண்ட குறைவான வீதத்திலேயே வளர்ச்சியடைந்தது. இம்மெதுவானன வளர்ச்சி, இவ்விரு காலப்பகுதிகளினுள் 1.3 மில்லியனிலிருந்து 1.2 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த தனியார் பணிகள் வகையின் தொழில்நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சியாலேயே முக்கியமாக ஏற்பட்டது.

**காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தனியார்துறையின் தொழில்நிலையின் பங்கு 2005 ஓகத்திலான 46.2 சதவீதத்திலிருந்து 42.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** அரசதுறைத் தொழில்நிலையின் பங்கு 2005 ஓகத்திலான 13.2 சதவீதத்திலிருந்து 2006இல் 13.4 சதவீதத்துக்கு அதிகரித்தது. மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் அரசதுறைத் தொழில்நிலையிலான விரிவாக்கம் மத்திய வங்கியால் நடத்தப்பட்ட வருடாந்த அரசதுறை தொழில்நிலை அளவீட்டிலும், பிரதிபலிக்கப்பட்டது.

அட்டவணை 4.7 — மாவட்ட அடிப்படையில் குடித்தொகை


'000 ஆட்கள்

| மாவட்டம் | 2005 | 2006(அ) | மாற்றம் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2,382 | 2,421 | 39 | 1.6 |
| கண்டி | 1,343 | 1,361 | 18 | 1.3 |
| இரத்தினபுரி | 1,060 | 1,073 | 13 | 1.2 |
| பதுளை | 825 | 837 | 12 | 1.5 |
| குருநாகல் | 1,498 | 1,511 | 13 | 0.9 |
| கம்பகா | 2,111 | 2,125 | 14 | 0.7 |
| காலி | 1,030 | 1,040 | 10 | 1.0 |
| அநுராதபுரம் | 782 | 791 | 9 | 1.2 |
| களுத்துறை | 1,094 | 1,102 | 8 | 0.7 |
| மாத்தறை | 795 | 804 | 9 | 1.1 |
| நுவரெலியா | 729 | 735 | 6 | 0.8 |
| அம்பாறை | 618 | 627 | 9 | 1.5 |
| மட்டக்களப்பு | 549 | 556 | 7 | 1.3 |
| புத்தளம் | 737 | 745 | 8 | 1.1 |
| யாழ்ப்பாணம் | 603 | 595 | -8 | -1.3 |
| மாத்தளை | 466 | 471 | 5 | 1.1 |
| திருகோணமலை | 388 | 395 | 7 | 1.8 |
| அம்பாந்தோட்டை | 542 | 547 | 5 | 0.9 |
| மொனராகலை | 415 | 420 | 5 | 1.2 |
| பொலனறுவை | 377 | 382 | 5 | 1.3 |
| முல்லைத்தீவு | 141 | 145 | 4 | 2.8 |
| கிளிநொச்சி | 145 | 142 | -3 | -2.1 |
| வவுனியா | 145 | 164 | 19 | 13.1 |
| கேகாலை | 794 | 797 | 3 | 0.4 |
| மன்னார் | 99 | 100 | 1 | 1.0 |
| மொத்தம் | 19,668 | 19,886 | 218 | 1.1 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

வரைபடம் 4.3 — தொழிற்படையின் போக்கும் தொழிலின்மையும் (2002-2006)




[5] 10 வயதும் அதற்குக் கூடிய ஆட்களாகவும் வேலை செய்வதற்கு விருப்புடையவர்களாகவும் இருப்பவர்கள் தொழிற்படை என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

[6] தொழிற்படையின் பங்குபற்றலின் வீதமானது, பத்து வயதும் அதற்கு மேற்பட்டதுமான குடும்ப அலகுகளின் குடித்தொகைக்கான தொழிலாளர் படையினுடைய விகிதமாகும்

## அட்டவணை 4.8 குடும்ப அலகுகளின் குடித்தொகை தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு

| விடயம் | 2004(அ) | 2005(ஆ) | 2005(ஆ)(இ) | 2006(இ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்கானது |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை (ஈ) 000 ஆட்கள் | 16,593 | 16,871 | 14,838 | 14,759 | 14,779 | 14,989 | 14,967 | 14,834 |
| தொழிற்படை 000 ஆட்கள் | 8,061 | 8,141 | 7,312 | 7,628 | 7,549 | 7,602 | 7,629 | 7,599 |
| தொழிலில் உள்ளோர் | 7,394 | 7,518 | 6,788 | 7,081 | 7,074 | 7,112 | 7,109 | 7,105 |
| தொழில் அற்றோர் | 667 | 623 | 524 | 546 | 476 | 490 | 479 | 493 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (உ) சதவீதம் | 48.6 | 48.3 | 49.3 | 51.7 | 51.1 | 50.7 | 51.0 | 51.2 |
| ஆண் | 66.7 | 67.1 | 67.3 | 69.3 | 68.4 | 68.0 | 67.0 | 68.1 |
| பெண் | 31.5 | 30.9 | 32.6 | 35.5 | 35.4 | 35.0 | 36.1 | 35.7 |

(அ) 2004ஆம் ஆண்டு மதிப்பீடுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை.
(ஆ) 2005 ஒகத்தில் ஒரே ஒரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
(இ) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஈ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
(உ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவிதம் பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரும்.

மூலம்: தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்

### தொழில்வாய்ப்பின்மை

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின்படி தொழில் வாய்ப்பின்மை வீதம் 2005 ஓகத்தில் பதிவு செய்யப்பட்ட 7.2 சதவீதத்திலிருந்து 2006இல் 6.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும் மூன்றாம் காலாண்டின் 6.4 சதவீதத்திலிருந்து 2006இன் நான்காம் காலாண்டில் 6.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இவ்வீழ்ச்சி, 2006 காலப்பகுதியில் பொருளாதாரத்தின் சகல மூன்று துறைகளிலும் ஏற்பட்ட செழிப்பான வளர்ச்சியுடன் இணைந்து காணப்பட்டது. தொழில் உருவாக்கத்துக்கான பலவகையான நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கம், தொழில் சந்தை தகவலின் பரம்பல் மற்றும் பதவி வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் தொழில் வாய்ப்பின்மை வீதத்தைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்தன.

**இளவயதினர் மற்றும் பெண்களிடையேயான தொழில்வாய்ப்பின்மை வீதம் சார்பு ரீதியில் உயர்ந்து காணப்படுகிறது.** எனினும், குறிப்பாக 15 - 19 வருடங்களைக் கொண்ட வயதுத் தொகுதிகளிடையேயான இளைஞர்களின் தொழில்வாய்ப்பின்மை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. காலாண்டு தொழிற்படை அளவீட்டு மதிப்பீடுகளின்படி, இவ்வயதுத் தொகுதியிலான தொழில்வாய்ப்பின்மை வீதம் 2005 ஓகத்திலான 33.2 சதவீதத்திலிருந்து 2006இல் 23.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் 20-29 வயதுத் தொகுதியினரிடையேயான தொழில்வாய்ப்பின்மை வீதம் தொடர்ந்து மாறாதிருந்தது. மேலும், க.பொ.த (சா.தரம்) மற்றும் க.பொ.த (உ.தரம்) மற்றும் உயர் தகைமைகளைக் கொண்டோரின் தொழில்வாய்ப்பின்மை வீதங்கள் முறையே 10.6 சதவீதம் மற்றும் 12.2 சதவீதத்திலிருந்து, 9.9 சதவீதம் மற்றும் 11.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், இம்மதிப்பீடுகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2006 இன் காலாண்டு தொழிற்படை அளவீடு நடத்தப்படாததால் இரண்டு ஆண்டுகளுக்கும் இம்மாகாணங்கள் உள்ளடக்கவில்லை.

### வெளிநாட்டு தொழில் வாய்ப்பு

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மதிப்பீடுகளின்படி 2006 இறுதியில் 1.5 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிந்தனர்.** எனினும், 2006இல் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பைப்

## அட்டவணை 4.9 பொருளாதார நடவடிக்கைகளின்படி தொழில் நிலை

| துறை | '000 ஆட்கள் | | | | | | | | மொத்த தொழில் நிலையின் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 (அ) | 2005 (ஆ) | 2005 (ஆ)(இ) | 2006(இ) 1ஆம் கால் | 2006(இ) 2ஆம் கால் | 2006(இ) 3ஆம் கால் | 2006(இ) 4ஆம் கால் | 2006(இ) ஆண்டுக் கானது | 2004 (அ) | 2005 (ஆ) | 2005 (ஆ)(இ) | 2006 (இ) |
| **வேளாண்மை** | **2,475** | **2,306** | **2,059** | **2,346** | **2,423** | **2,122** | **2,357** | **2,287** | **33.5** | **30.7** | **30.3** | **29.8** |
| **கைத்தொழில்** | **1,781** | **1,928** | **1,787** | **1,863** | **1,791** | **2,018** | **1,892** | **1,890** | **24.1** | **25.6** | **26.3** | **28.4** |
| தயாரிப்பு | 1,307 | 1,385 | 1,293 | 1,333 | 1,250 | 1,486 | 1,357 | 1,363 | 17.7 | 18.4 | 19.0 | 20.9 |
| கட்டடவாக்கம் (ஈ) | 474 | 543 | 494 | 530 | 541 | 532 | 535 | 527 | 6.4 | 7.2 | 7.3 | 7.5 |
| **பணிகள்** | **3,138** | **3,284** | **2,941** | **2,872** | **2,860** | **2,972** | **2,901** | **2,928** | **42.4** | **43.7** | **43.3** | **41.8** |
| வர்த்தகம் உணவகங்கள் முதலியன | 1,031 | 1,043 | 932 | 1,101 | 1,034 | 1,088 | 1,043 | 1,084 | 13.9 | 13.9 | 13.7 | 15.3 |
| போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 417 | 485 | 448 | 404 | 404 | 438 | 439 | 430 | 5.6 | 6.5 | 6.6 | 6.2 |
| நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 176 | 234 | 226 | 236 | 213 | 244 | 196 | 221 | 2.4 | 3.1 | 3.3 | 3.4 |
| தனிப்பட்ட பணிகள்மற்றும் ஏனையவை | 1,514 | 1,522 | 1,335 | 1,131 | 1,209 | 1,203 | 1,223 | 1,192 | 20.5 | 20.2 | 19.7 | 16.9 |
| **மொத்தத் தொழில் வாய்ப்பு** | **7,394** | **7,518** | **6,788** | **7,081** | **7,074** | **7,112** | **7,150** | **7,105** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதம் | 91.7 | 92.3 | 92.8 | 92.8 | 93.7 | 93.6 | 93.7 | 93.5 | - | - | - | - |

(அ) 2004ஆம் ஆண்டு மதிப்பீடுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை.
(ஆ) 2005 ஓகத்தில் ஒரே ஒரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
(இ) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஈ) சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் மின்சாரம், வள மற்றும் நீர் எனினும் கட்டுமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2004 மற்றும் 2005 தரவுகள் அதன் மின்சாரம் திருத்தபட்டுள்ளது.

மூலம்: தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்

**அட்டவணை 4.10** **தொழில்நிலை தகைமை**

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் தருநர் | சுய வேலை செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப வேலையாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2004(அ) | 13.0 | 46.4 | 2.9 | 28.3 | 9.4 | 100 |
| 2005(ஆ) | 13.3 | 46.1 | 3.1 | 29.7 | 7.9 | 100 |
| 2005(ஆ)(இ) | 13.2 | 46.2 | 2.8 | 29.7 | 8.1 | 100 |
| 2006(இ) | | | | | | 100 |
| 1ஆம் காலாண்டு | 13.4 | 41.9 | 3.2 | 31.6 | 9.9 | 100 |
| 2ஆம் காலாண்டு | 13.4 | 42.0 | 3.0 | 30.6 | 11.1 | 100 |
| 3ஆம் காலாண்டு | 14.0 | 42.1 | 3.6 | 30.1 | 10.2 | 100 |
| 4ஆம் காலாண்டு | 13.1 | 42.8 | 3.0 | 30.5 | 10.6 | 100 |

(அ) 2004ஆம் ஆண்டு மதிப்பீடுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடக்கப் படவில்லை.
(ஆ) 2005 ஓகத்தில் ஒரேயொரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப்பட்டது.
(இ) வடக்கு கிழக்கு மாகாணங்களின் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 4.11** **அரசதுறை தொழில் நிலை**

| | 2004 | 2005 | 2006(அ) | சதவீத மாற்றம் 2005/ 2004 | சதவீத மாற்றம் 2006/ 2005(அ) |
|---|---|---|---|---|---|
| அரசு (ஆ) | 842,255 | 850,321 | 887,674 | 0.9 | 4.4 |
| அரசசார் (இ) | 252,659 | 253,922 | 258,049 | 0.5 | 1.6 |
| அரசதுறை | 1,094,914 | 1,104,243 | 1,145,723 | 0.8 | 3.8 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(இ) அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள், அரச மேலாண்மைச் சபைகள் போன்றவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெற்றோரின் எண்ணிக்கை, 2005இலான 231,290 உடன் ஒப்பிடுகையில் 201,143 இற்கு 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது முக்கியமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்திலான போர் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் மற்றும் பணிப்பெண்களின் குறைந்தளவிலான வழங்கலால் ஏற்பட்டது. மத்திய கிழக்குப் பிராந்தியம் மொத்த வெளிநாட்டு தொழில்நிலை வாய்ப்புக்களில் 90 சதவீதத்துக்கும் கூடுதலாக பங்களிப்புச் செய்தது. எனினும், அரசின் முயற்சிகள் காரணமாக தென்கொரிய மற்றும் மலேசியாவிலான தொழில்நிலை வாய்ப்புக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது.

**வெளிநாட்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுச் சென்ற ஆண்களின் பங்கு தொடர்ந்து அதிகரித்தது.** 1990 இன் நடுப்பகுதிகளில் 25 சதவீதமாக இருந்த வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பில் ஆண்களின் பங்கு 2005இலான 41 சதவீதத்திலிருந்து 2006இல் 44 சதவீதத்துக்கு மேலும் அதிகரித்தது. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் ஆண்களின் பங்கில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு கடந்த இரண்டு ஆண்டுகளில் கட்டாரில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத வேலைகளுக்கான உயர் கேள்வியால் ஏற்பட்டதாகும். இதனால், மொத்த வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் பெண்களின் பங்கு 2005இன் 59 சதவீதத்திலிருந்து 2006இல் 56 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேர்ச்சி அபிவிருத்திகளை ஊக்கப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை எடுத்ததற்கு மத்தியிலும் எளிதில் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகும் மற்றும் ஆகக் குறைந்த வருமானம் சம்பாதிக்கும் வீட்டுப்பணிப் பெண்களின் பங்கு 2005இன் 54 சதவீதத்திலிருந்து 2006இல் 50 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்த போதிலும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களில் 70 சதவீதமானோர் தேர்ச்சிகளற்ற வகையினராக காணப்பட்டனர்.** 80 சதவீதத்துக்கும் கூடுதலான இணைந்த பங்குடன் குறிப்பாக சவூதி அரேபியா, குவைத், ஐ.அ.கு., கட்டார், லெபனான் மற்றும் ஜோர்டான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மனிதவலு வகைகளில் பணிப்பெண்கள் மீது உயர் செறிவு காணப்பட்டது. இதற்கு முரணாக, மலேசியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் தேர்ச்சி பெற்ற புலம் பெயர்வை ஊக்குவிக்கும் புதிய அரசின்

**அட்டவணை 4.12** **வேலையற்றோர் வீதம் (வேலைப்படையின் சதவீதமாக வேலையற்றோர்)**

| வகை | 2004(அ) | 2005(ஆ) | 2005 (ஆ)(இ) | 2006(இ) 1ஆம் கால் | 2006(இ) 2ஆம் கால் | 2006(இ) 3ஆம் கால் | 2006(இ) 4ஆம் கால் | 2006(இ) ஆண்டுக்கானது |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து | | | | | | | | |
| பால் வகைப்படி | 8.3 | 7.7 | 7.2 | 7.2 | 6.3 | 6.4 | 6.3 | 6.5 |
| ஆண் | 6.0 | 5.5 | 5.3 | 5.5 | 4.9 | 4.6 | 4.3 | 4.7 |
| பெண் | 12.8 | 11.9 | 10.7 | 10.1 | 8.7 | 9.8 | 9.8 | 9.7 |
| வயது அடிப்படையில் | | | | | | | | |
| 15 - 19 | 28.3 | 30.8 | 33.2 | 31.3 | 23.3 | 20.7 | 20.3 | 23.1 |
| 20 - 29 | 19.2 | 17.2 | 16.0 | 16.8 | 15.3 | 16.4 | 15.9 | 15.9 |
| 30 - 39 | 4.0 | 3.8 | 3.5 | 3.5 | 2.9 | 3.2 | 3.3 | 3.3 |
| 40 உம் அதற்கு மேல் | 1.3 | 1.2 | 2.4 | 1.3 | 1.1 | 1.2 | 1.5 | 1.4 |
| கல்வி அடிப்படையில் | | | | | | | | |
| வகுப்பு 4/ ஆண்டு 5 அதற்குக்கீழ் | 2.0 | 1.8 | - | - | - | - | - | - |
| வகுப்பு 5-9/ 6-10ஆண்டு | 6.9 | 6.3 | 6.1 | 6.5 | 5.9 | 5.6 | 5.5 | 5.8 |
| க.பொ.த (சா.த)/ பொ.க.தே.சா | 12.3 | 11.5 | 10.6 | 10.0 | 10.3 | 9.9 | 9.2 | 9.9 |
| க.பொ.த (உ..த)/ தே.க.பொ.த.ப | 16.8 | 13.8 | 12.2 | 12.1 | 10.6 | 11.3 | 12.0 | 12.6 |

(அ) 2004 வருடாந்த மதிப்பீடுகளில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் நீக்கப்பட்டுள்ளன.
(ஆ) 2005 ஓகத்தில் ஒரேயொரு அளவீடாக காலாண்டு தொழிற்படை அளவீடு மேற்கொள்ளப்பட்டது.
(இ) தரவுகளில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது

மூலம்: தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்

**அட்டவணை 4.13** வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

| தொழிற்நிலை | 2004 | | 2005 | | 2006(அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| தொழிலில் உள்ளோர் | 214,709 | 100.0 | 231,290 | 100.0 | 201,143 | 100.0 |
| மூலத்தின்படி | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 156,146 | 72.7 | 165,707 | 71.6 | 142,883 | 71.0 |
| ஏனையோர் | 58,563 | 27.3 | 65,583 | 28.4 | 58,260 | 29.0 |
| பால் வகையின்படி | | | | | | |
| ஆண்கள் | 80,699 | 37.6 | 93,896 | 40.6 | 88,747 | 44.1 |
| பெண்கள் | 134,010 | 62.4 | 137,394 | 59.4 | 112,396 | 55.9 |
| மனித வலு வகை | | | | | | |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 110,512 | 51.5 | 125,493 | 54.3 | 100,326 | 49.9 |
| ஏனையோர் | - | - | - | - | - | - |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 45,946 | 21.4 | 46,688 | 20.2 | 44,464 | 22.1 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 43,204 | 20.1 | 41,904 | 18.1 | 40,518 | 20.1 |
| ஏனையோர் | 15,047 | 7.0 | 17,205 | 7.4 | 15,835 | 7.9 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

கொள்கையால் அத்தகைய நாடுகளுக்கான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் புலம்பெயர்வில் ஓர் உயர் குவிவு காணப்பட்டது.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**கடந்த சில ஆண்டுகளில் நிலவிய போக்கைப் பின்பற்றி, தொழிலாளர் உற்பத்தித்திறன் 2006இலும் தொடர்ந்து முன்னேறியது.** இவ்விரு ஆண்டுகளிடையே ஒப்பிடத்தக்கதாக இருப்பதற்கு 2006 இற்கான தொழில்நிலை எண்ணிக்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சீராக்கம் செய்யப்பட்டதன் அடிப்படையில் பெறுமதி கூட்டல் நியதிகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்தால் அதிகரித்து தொழிலாளர் ஒருவருக்கு ரூ.142,700 ஆக விளங்கியது. 2006இலான உற்பத்தித் திறனிலான அதிகரிப்புக்கு முக்கிய பங்களிப்புக் காரணியாக பணிகள் துறையின் உற்பத்தித்திறனிலான கணிசமான அதிகரிப்பு விளங்குகையில் கைத்தொழில் துறையிலிருந்தான பங்களிப்பு மிகச் சிறிதாகவே காணப்பட்டது. இதேவேளை, தாழ்ந்த மட்டங்களில் தொடர்ந்து விளங்கிய வேளாண்மைதுறை உற்பத்தித்திறன் 2005 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து இவ்வாண்டுக்கான பொதுவான உற்பத்தித்திறனுக்கு தடையை ஏற்படுத்தியது.

## தொழில் உறவுகள்

**2006இல் தனியார்துறையிலான வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை கடந்த தசாப்தத்தில் ஆகக் குறைந்த அளவுக்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும், இதற்கு மாறாக 2006 இல் பெரும் எண்ணிக்கையான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபட்டமையினால், இழக்கப்பட்ட மனித நாட்கள் மற்றும் ஈடுபாடு கொண்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 2006 ஆம் ஆண்டில் ஆகக்கூடிய அளவைப் பதிவு செய்தது. 2006இன் நான்காம் காலாண்டில் பெருந்தோட்டத் துறையிலான தொழிற்சங்க நடவடிக்கை பெருந்தோட்டக் கைத்தொழிலில் கடுமையான தாக்கத்தைக் கொண்டிருந்தது. பெருந்தோட்டத் துறையில் இழக்கப்பட்ட மொத்த மனித நாட்கள் பெருந்தோட்டத் துறையும் அதுபோல் ஏற்றுமதி வர்த்தகமும், உற்பத்தி மற்றும் தரம் வழமைக்குத் திரும்பும் வரை தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகுமென்பதை குறிப்பாக உணர்த்துகிறது. பெருந்தோட்டத் துறை தவிர்ந்த ஏனைய துறைகளிலான வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையும் 2006 இல் வீழ்ச்சியடைந்தது. இதைப் பிரதிபலித்து, இழக்கப்பட்ட மொத்த மனித நாட்கள் மற்றும் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை இவ்வகையில் 50 சதவீதத்துக்கும் மேலாக திடீரென வீழ்ச்சியடைந்தது. இச்சாதகமான அபிவிருத்தி, தொழில் தருநர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கிடையேயான கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல், இக்குழுக்களுக்கிடையேயான சிறந்த உறவுகள் மற்றும் கைத்தொழில் அமைதியை மேம்படுத்துவதற்கு வேலைத்தளத்தில் சிறந்த சமூக உரையாடலைப் பேணல் போன்ற பல காரணிகளின் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும். அவ்வாறான சிறந்த சூழலை தொடர்ச்சியாகப் பேணுதல், நாட்டில் முதலீட்டையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கு அத்தியாவசியமாகிறது.

**அட்டவணை 4.14** நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர்

| நாடு | 2005 | | 2006 (அ) | | மாற்றம் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| கட்டார் | 35,953 | 15.5 | 31,177 | 15.5 | -4,776 | -13.3 |
| சவுதி அரேபியா | 76,210 | 33.0 | 61,385 | 30.5 | -14,825 | -19.5 |
| ஐ.அ.எமிரேற் | 36,371 | 15.7 | 33,386 | 16.6 | -2,985 | -8.2 |
| குவைத் | 36,157 | 15.6 | 34,526 | 17.2 | -1,631 | -4.5 |
| ஏனையவை | 46,599 | 20.2 | 40,669 | 20.2 | -5,930 | -12.7 |
| மொத்தம் | 231,290 | 100.0 | 201,143 | 100.0 | -30,147 | -13.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**குறிப்பிட்ட முக்கிய அரசதுறை நிறுவனங்களில் காணப்பட்ட பிணக்குகள் பொதுவான கைத்தொழில் அமைதியைப் பேணுவதில் கரிசனைகளை ஏற்படுத்திவிட்டன.** இலங்கை புகையிரத திணைக்களம், இலங்கை மின்சபை, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற முக்கிய அரச நிறுவனங்களில் இவ்வாண்டில் நிலவிய தொழிலாளர் அமைதியின்மையைக் கருத்திற் கொண்டு வளர்ச்சியை முன்னேற்றுவதற்கான உரிய சூழலை உருவாக்குவதற்கான தேவை வலியுறுத்தப்படவேண்டும்.

## தொழிற் சந்தைச் சீர்திருத்தங்கள்

**தீங்கு விளைவிக்கக்கூடிய தொழில்களில் 18 வயதுக்குக் குறைந்த ஆட்களை தொழிலுக்கமர்த்துவதை கட்டுப்படுத்துவதற்கான திருத்தங்களுடன் பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் (திருத்தம்) சட்டத்தை தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 2006 காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.** சிறுவரை வேலைக்கமர்த்தும் மோசமான தன்மையுடைய தீங்கு விளைவிக்கும் வேலையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வேலையில் 18 வயதுக்குக் குறைவான ஆட்களை உள்ளடக்குவது தொடர்பாக சட்டத்தில் எந்தவித ஏற்பாடுகளும் முன்பு இருக்கவில்லை. இது தொடர்பாக, சிறுவரை

## அட்டவணை 4.15 முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தியாக்கம்

| | 2004 | 2005(அ) | 2006(ஆ) |
|---|---|---|---|
| **நிலையான விலைகளில் (1996) மொ.உ.உ. ரூ.மில்லியன்** | 980,720 | 1,039,763 | 1,116,215 |
| வேளாண்மை | 175,852 | 179,278 | 187,729 |
| கைத்தொழில் | 259,286 | 280,868 | 300,982 |
| பணிகள் | 545,582 | 579,618 | 627,504 |
| **தொழிலாளர் உற்பத்தியாக்கம் ரூ.'000 ஆளுக்கு(இ)** | 134.0 | 138.3 | 142.7 |
| வேளாண்மை | 70.8 | 77.7 | 73.8 |
| கைத்தொழில் | 161.3 | 152.3 | 154.6 |
| பணிகள் | 169.1 | 172.1 | 188.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) வடக்கு மற்றும் கிழக்கு மாகணங்களை நீக்குவதற்கான திருத்தப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூலங்கள்: தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வேலைக்கமர்த்தலை இல்லாமல் செய்வதற்காக வழிகாட்டல் குழுவால் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த குழு சிறுவரை வேலைக்கமர்த்தும் மோசமான தன்மையின் வடிவின் கீழ் வகைப்படுத்தப்படக்கூடிய தொழில் நிலையின் வகைகளை ஆராய்ந்தது.

**தொழில் முடிவுறுத்தலின் பின்பு தொழிலாளரின் தொழிலை முடிவுறுத்தல் சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளருக்கும் மற்றும் கைத்தொழில் பிணக்குகள் சட்டங்களின் கீழ் தொழில் நீதிமன்றங்களுக்கும், மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதியை 3 மாதங்களிலிருந்து 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கு 1950ஆம் ஆண்டின் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் இல. 43 இற்கும் மற்றும் 1971 ஆம் ஆண்டில் தொழிலாளரின் தொழிலை முடிவுறுத்தல் சட்டத்தின் இல. 45 இற்கும் தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு திருத்தங்களை மேற்கொண்டது.** இவை, 1975ஆம் ஆண்டின் ஊழியர் சேம நிதிய (விசேட ஏற்பாடு) தொழிலாளர் இல. 6 இற்கான திருத்தங்களையும் முன் வைத்தன. ஆணையாளரின் கருத்தின்படி ஓய்வூதிய நிதியங்கள் ஊ.சே.நிதியங்களைவிட தொழிலாளர்களுக்கு கூடிய நன்மையளிக்கக் கூடியதாகவும் மற்றும் 1990 பெப்புருவரி 01இல் நடைமுறையிலிருந்த ஒப்புதலளிக்கப்பட்ட சேமநிதியங்கள் மற்றும் ஓய்வூதிய திட்டங்களின் தொழிற்பாட்டையும் செல்லுபடியாக்கினால் மட்டுமே ஓய்வூதிய நிதியங்களுக்கு ஆணையாளர் அனுமதி வழங்கும் சட்டத்தைத் திருத்துவதற்கான அமைச்சரவையின் ஒப்புதலை தொழில் அமைச்சர் வேண்டியிருந்தார். இது தொடர்பாக, அமைச்சரவை முன்மொழிவுக்கு ஒப்புதலளித்ததுடன் சட்ட வரைஞர்கள் அதற்குரியவாறு திருத்தங்களை வரையுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலை கட்டளைச் சட்டம் சகல துறைகளிமுள்ள தொழிலாளர்களை உள்ளடக்காததால், இச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கு தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆலோசித்து வருகிறது. இதற்குப் பதிலாக, சகல துறைகளிலுமுள்ள சகல தொழிலாளர்களையும் உள்ளடக்கும் விதத்தில் புதிய சட்டமான வேலை செய்யும் இடத்திலான தொழில் பாதுகாப்பு, நலன் மற்றும் நலன்புரி சட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

**இலங்கையில் கௌரவமான வேலைக்கான தேசிய கொள்கை தொடர்பான வேலையை தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு ஆரம்பித்தது. தேசிய கொள்கை மற்றும் நடவடிக்கைத் திட்டத்தை வரையும் நோக்கத்துடன் அமைச்சரின் தலைமையில் முத்தரப்பு வழிகாட்டல் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.** மேற்கூறப்பட்ட கொள்கை கௌரவமான வேலையின் முக்கிய துறைகளிலான குறைபாடுகளை இனங்காண்பதுடன் அவற்றை எதிர் கொள்ள வரையப்பட வேண்டிய கொள்கைகளையும் எடுத்துரைக்கிறது. கொள்கையை நடவடிக்கையாக மாற்றுவதற்கு முத்தரப்பு வழிகாட்டல் குழு மற்றும் பிராந்தியப் பங்கேற்பு என்பவற்றுடன் கௌரவமான வேலைக்கான தேசிய நடவடிக்கைத் திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட கொள்கையின் கீழ், வேலைக்கான வாய்ப்பு, வேலையிலான உரிமைகள் சமூக பாதுகாப்பு, சமூக கலந்துரையாடல் மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க தரத்தைக் கொண்ட தொழில்களை உருவாக்கல் என்பன கரிசனைக்குரிய முக்கிய துறைகளாக காணப்பட்டன. இதன்படி சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்பை உருவாக்குவதற்கு கௌரவமான வேலைத் தத்துவங்களுடனான

## அட்டவணை 4.16 தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனையவை(அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2004 | 44 | 15,832 | 40,779 | 46 | 17,514 | 40,321 | 90 | 33,346 | 81,100 |
| 2005 | 17 | 4,283 | 8370 | 40 | 49,282 | 149,982 | 57 | 53,565 | 158,352 |
| 2006(ஆ) | 19 | 196,520 | 4,821,394 | 34 | 13,283 | 72,513 | 53 | 209.803 | 4,893,907 |
| 1ஆம் காலாண்டு | 8 | 1,973 | 4,360 | 9 | 3,726 | 46,368 | 17 | 5,699 | 50,728 |
| 2ஆம் காலாண்டு | 3 | 1,463 | 2,593 | 7 | 4,166 | 10,932 | 10 | 5,629 | 13,525 |
| 3ஆம் காலாண்டு | 6 | 1,805 | 7,645 | 8 | 1,719 | 7,949 | 14 | 3,524 | 15,594 |
| 4ஆம் காலாண்டு | 2 | 191,279 | 4,806,796 | 10 | 3,672 | 7,264 | 12 | 194,951 | 4,814,060 |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: தொழில் திணைக்களம்

தற்போதைய கொள்கையின் பல நிலைப்பாடுகளை இறுக்கமாக்குவதற்கு மேற்கூறப்பட்ட கொள்கை உத்தேசித்துள்ளது.

## 4.5 கொள்கைகளும் பிரச்சனைகளும்

**அதிகளவில் உயர்ந்தும் தளம்பலுற்றும் செல்லும் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தை பொருத்தமான முறையில் கட்டுப்படுத்துவது அவசியமாகும்** பணத்தால் உந்தப்பட்ட பணவீக்கம் மத்திய வங்கியால் அதன் நாணயக் கொள்கையின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. அண்மைக் காலங்களில் நிலவிய உயர் தளம்பலின் ஒரு பகுதி, உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு முறைமைகளுடன் இணைந்த குறிப்பிடத்தக்க அமைப்பு ரீதியிலான பிரச்சனைகளிலிருந்து எழும் வழங்கற் பக்கத்து காரணிகளால் பெருமளவில் ஏற்பட்டது. அபரிமிதமான காலப்பகுதிகளில் சில வேளாண்மைப் பொருட்களை பாதுகாப்பதற்கான முறைமையுடன் குறிப்பாக வேளாண்மை உற்பத்திகளை கையாளல் மற்றும் பகிர்ந்தளித்தல் முறைமைகளிலான மேம்பாடுகள் விலைகளின் உயர் தளம்பலைக் குறைப்பதற்கு உதவுக்கூடும். மேலும், இறக்குமதிகளின் சுமூகமான பாய்ச்சலை ஊக்குவிப்பதற்கு மேலேழுந்த வாரியான தீர்வுத் திருத்தங்களைத் தவிர்த்தல் மற்றும் பதனிடப்பட்ட உணவுக் கைத்தொழிலை ஊக்குவித்தல் என்பன விலைத் தளம்பலை கட்டுப்படுத்தும் ஏனைய வழிமுறைகளாகும்.

**எரிபொருள் மீது அதிகளவு தங்கியிருத்தல் மற்றும் அதன் வினைத்திறன்மிக்க பயன்பாட்டுக்கு கொள்கைகள் இல்லாமை பன்னாட்டு விலைத் தளம்பல்களுக்கு உள்நாட்டு விலைகள் பெருமளவு பாதிப்படையக் கூடிய தன்மைக்கு இட்டுச் சென்றுள்ளன.** வலுவின் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலங்களின் முழுமையான உள்ளார்ந்த வளத்தைப் பயன்படுத்துவதற்கு வலுவைப் பாதுகாப்பதற்கான தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டம் அமுல் படுத்தப்பட வேண்டும்.

**பணவீக்கத்தை அளவிடுவதற்கு காலத்துக்கு ஒவ்வாத சுட்டெண்களைப் பயன்படுத்தல் விலைகளிலான பொது- அதிகரிப்பின் குறைந்த தன்மையினையே பிரதிபலிக்கின்றது.** பணவீக்கத்தின் கூடிய பிரதிநிதித்துவத்துடனான அளவீட்டை விருத்தி செய்தல் மற்றும் அதை சகல பங்குடமையாளர்களாலும் அலுவலக ரீதியாக ஏற்றுக் கொள்ளச் செய்தல் என்பனவும் கொள்கை விடயங்களுக்கான கூடிய முக்கியத்துமுடைய பகுதியாக விளங்குகிறது.

**பணவீக்கத்தின் எதிர்மறை விளைவுகளை ஈடுசெய்வதற்கு பெயரளவு கூலிகளில் மேற்கொள்ளப்பட்ட மேல் நோக்கிய சீராக்கங்களின் தொடர்ச்சி குறிப்பாக, அரசதுறையின் உற்பத்தித்திறனில் தகுந்த மேம்பாடுகளின்றி உண்மைக் கூலிகளில் அதிகரிப்பை ஏற்படுத்தியது.** இப்போக்கு பணவீக்கம் மீதும் அழுத்தத்தைக் காட்டியது. அவ்வாறான வழிமுறைகளைத் தாமதிப்பது நிலைமையை மேலும் மோசமாக்கி தனியார்துறை கூலி அபிவிருத்திகளுக்கும் பரவக்கூடும். இறுதியில், இது பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையைப் பாதிக்கும்.

**பொருளாதாரத்தின் சில துறைகள் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இன்மையால் பாதிப்புறுகையில், படித்த இளைஞரிடையேயான தொழிலின்மை வீதம் உயர்ந்த வீதத்தில் காணப்படுகின்றமை கல்வி முறைமையிலான குறைபாடுகளை தெளிவாக வெளிப்படுத்துகின்றது.** உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தொழிற் சந்தைகளில் மாற்றமுறும் நிலைமைகளை எதிர் கொள்வதற்கு தேர்ச்சி அபிவிருத்திகளுக்கான பயன் தரும் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்த கல்விச் சீர்திருத்தங்களுக்கான தேவை பரந்தளவில் கலந்துரையாடப்பட்டு இணக்கம் காணப்பட்ட போதிலும் வேண்டப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கம் இன்னும் பின் தங்கியே காணப்படுகிறது. இது, சில தொழில்தருநர்கள் அவர்களின் தேவைகளை எதிர் கொள்வதற்கு உயர்மட்ட மனித மூலதனத்தை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புக்களைத் தேடிக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

**புலம் பெயர்ந்த இலங்கையரிடமிருந்து வரும் பணவனுப்பல்கள் இலங்கையின் வெளிநாட்டுத்துறை மீதான அழுத்தத்தை தணிப்பதற்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்குகிறது.** எனினும், மத்திய கிழக்கில் தேர்ச்சியற்ற தொழில் வாய்ப்புகளுக்கான உயர் செறிவுடன், குறைந்த கேள்வியைக் கொண்டிருக்கும் தேர்ச்சியற்ற தொழிலாளரையே இலங்கை தற்போதும் பெருமளவிற்கு வெளிநாட்டுக்கு அனுப்புகிறது. வெவ்வேறான தொழில் வகைகளிடையேயும் வேறுபட்ட புவியியற் பிரதேசங்களிடையேயும் தொழிலாளர் வழங்கலைப் பன்முகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், கூடுதலான வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு வரும். இலங்கையின் உள்ளார்ந்த வளத்தை அதிகரிப்பதுடன், அவ்வாறான தொழில் ஆவலுள்ளோரில் அநேகமானோர் தற்போது கூட கிராமப்புற வறியவர்களிடமிருந்தே வருவதால் பிராந்திய அபிவிருத்தி மற்றும் வறுமைக் குறைப்பிற்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உதவி செய்யும். மேலும், கூடிய பணவனுப்பல் உட்பாய்ச்சல்களை கவருவதற்கான பொறிமுறையை புதுப்பிப்பது நிதியியல் முறைமைக்கு அவசியமாகிறது.

### சிறப்புக் குறிப்பு 5

### பணவீக்கத்தினை சிறந்த முறையில் காட்டும் அளவிடலொன்றிற்கான தேவை

பணவீக்கமானது பொது விலை மட்டத்திலான மாற்றம் ஆகும். பணவீக்கத்தின் அளவீடானது பொது விலையிலான மாற்றத்தின் அளவீட்டினைப் பெறுவதற்கு தனிப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலான மாற்றங்களினை ஒன்று சேர்ப்பதனுடன் தொடர்புபடுகின்றது. பணவீக்கத்தின் துல்லியமான அளவீடுகள் நாணயக் கொள்கையினுடைய இறுதி இலக்கான விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு இன்றியமையாதவையாகும்.

பொருளாதாரத்தில் வர்த்தகம் செய்யப்படும் எல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளினதும் விலை மாற்றங்களினைக் கண்காணிப்பது சாத்தியமற்றது. எனவே, பணவீக்க அளவீடுகள் பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற, நுகர்வு செய்யப்படுகின்ற அல்லது உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் துணைத்தொகுதியான 'பொருட்கள் மற்றும் பணிகளின் கூடையில்' தங்கியுள்ளன. இலங்கையில் பயன்படுகின்ற விலைச்சுட்டெண்கள் கூடையில் உள்ளடக்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணிகள், ஒவ்வொரு பொருளுக்கும் வழங்கப்படுகின்ற நிறைகள், விலைச் சேகரிப்பின் புவியியல் பரப்பு, சனத்தொகை உள்ளடக்கம் மற்றும் அடிப்படை ஆண்டு போன்ற நியதிகளில் வேறுபடுகின்றன.

இலங்கையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அலுவல்சார் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணாக கருதப்படுகின்றது. இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண், கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண், கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண், மொத்த விலைச்சுட்டெண், மேல் மாகாண நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் பிராந்திய விலைச் சுட்டெண்கள் போன்றவை ஏனைய சில விலைச் சுட்டெண்களாகும்.

**சிறப்புக் குறிப்பு 5**

## பணவீக்கத்தினை சிறந்த முறையில் காட்டும் அளவிடலொன்றிற்கான தேவை

அட்டவணை சி. 5.1:
**வீட்டுடமையாளர் செலவினத்தின் கட்டமைப்பு**

| செலவின வகை | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் செலவினப் பங்கு (2006 திசெம்பர்) | நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 | வீட்டுடமையாளர் வருமான மற்றும் செலவின அளவீடு 2005 |
|---|---|---|---|
| உணவும் குடிபானமும் | 72% | 35% | 40% |
| போதைவஸ்து | 6% | 2% | 2% |
| ஆடை | 2% | 7% | 3% |
| வீடமைப்பு, நீர், எரிபொருள் மற்றும் வெளிச்சமூட்டல் | 10% | 15% | 15% |
| கல்வியும் சுகாதாரமும் | 1% | 6% | 8% |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 2% | 12% | 9% |
| பொழுதுபோக்கும் கலாச்சாரமும் | 2% | 7% | 2% |
| நானாவிதமானவை | 5% | 16% | 21% |
| மொத்தம் | 100% | 100% | 100% |

தரவுகளின் நீண்ட தொடரினைக் கொண்டதான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது 1949/50 களில் கொழும்பு மாநகர பிரதேசத்தில் வசித்து வந்த ஆகக் குறைந்த 40 சதவீத வீட்டுடமையாளர்களது மாதாந்த செலவினத்தின் செலவிடும் தன்மையினை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் சுட்டெண் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன் 1941ஆம் ஆண்டின் கூலிநிர்ணயச்சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் வாழ்க்கைச் செலவிலான மாற்றங்களின் அலுவல்சார் குறிகாட்டியாக கருதப்பட்டு அரசாங்க ஊழியர்கள், தோட்டத் தொழிலாளர் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற ஏனைய கைத்தொழில்களின் ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படிகளினை தீர்மானிப்பதற்கு பாவிக்கப்படுகின்றது.

பொது விலையிலான மாற்றங்களினை பிரதிபலிக்கக்கூடியதாக கூடையில் உள்ளடக்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் மாதிரி மிகவும் முக்கியமானதாகும். விலைச்சுட்டெண்ணினைப் பெறுவதற்காக தெரிவு

செய்யப்பட்ட ஒவ்வொரு பொருட்களுக்கும் பொருத்தமான நிறையினைப் பாவிப்பது அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை உறுதிப்படுத்துவதற்கு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை கணக்கிடுவதற்காக தெரிவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் அவற்றிற்கு வழங்கப்படும் சார்பு ரீதியான நிறைகள் போன்றன இலக்கிடப்பட்ட குழுவின் நுகர்வு போக்கிலான சமகால அளவீடு ஒன்றின் கண்டறியப்பட்டவைகளினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென வேண்டப்படுகின்றது. இந்த அடிப்படையில், இலங்கையில் அலுவல்சார், பணவீக்க அளவீடானது மதிப்பற்ற வகையில் பழமையாகியுள்ளது. கொழும்பு நுகர்வொர் விலைச் சுட்டெண்ணில் பாவிக்கப்பட்ட நிறைகள் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 2003/2004 மற்றும் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவின அளவீடு - 2005 ஆகிய இரு அண்மைய அளவீடுகளில் கண்டறியப்பட்டவைகளிலிருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபடுகின்றன. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் பயன்படுத்தப்பட்ட முக்கிய செலவின வகைகளது நிறைகளும் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு மற்றும் குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவின அளவீடு போன்றவற்றில் கண்டறியப்பட்டவைகளும் அட்டவணை சி5.1இல் ஒப்பிடப்படுகின்றது.

1952இலிருந்து செலவின போக்குகளிலான மாற்றங்களினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் கூடையானது எரிவாயு, நீர் கட்டணங்கள், தொலைபேசிக் கட்டணங்கள், தனியார் வகுப்புக்கான கட்டணங்கள் மற்றும் நுளம்புத்திரி போன்ற தற்போதைய முக்கிய செலவின விடயங்கள் சிலவற்றை உள்ளடக்கவில்லை. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையில் உணவுப்பொருட்கள் குறிப்பிடத்தக்களவில் மிகையாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. கொ.நு.வி. சுட்டெண்ணில் புவியியல் உள்ளடக்கமும் கொழும்பு மாநகர பிரதேசத்திற்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளதனையும் அவதானிக்க முடியும். எனினும், சிறந்த புவியியல் உள்ளடக்கத்தினைக் கொண்ட மற்றைய உள்ளார்ந்த மாற்றீடான இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் உணவுப் பொருட்களினை அதிகளவு மிகையாக பிரதி நிதித்துவப்படுத்துவதனால் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு போதுமானளவில் உள்ளடக்க விடயங்களைக் கொண்டிருக்கவில்லை

கொ.நு.வி. சுட்டெண்ணினைப் பயன்படுத்தி பணவீக்கத்தினைப் பெறுகின்ற முறையியலானது நிலையான நுகர்வுப் போக்கினையும், காலந்தோறும் பொருட்கள் மற்றும் பணிகளின் ஒத்த தன்மையினையும் உள்ளார்ந்த ரீதியில் எடுகோளாக கொண்டமையானது குறிப்பாக நீண்ட காலத்தில் யதார்த்தத்தன்மைக்கு புறம்பானதாகவிருக்கின்றது. எனினும், தொழிநுட்ப முன்னேற்றங்களினால் நுகர்வுப் பொருட்களின் தரம் காலந்தோறும் மாற்றமடைகின்றது. அதேவேளை, புதிய பொருட்களும் பணிகளும் தொடர்ந்தும் நுகர்வுப் பொதிகளில் நுழைகின்ற வேளை பழைய பொருட்கள் கைவிடப்படுகின்றன. இதற்கு மேலாக வீட்டுடமையாளர்களது வருமான மட்டங்களில் ஏற்படும் மாற்றங்களுடன் ஒவ்வொரு பொருட்களினது நுகர்வின் அளவும் காலந்தோறும் மாற்றமடைகின்றது.

ஏனைய நாடுகளில், இத்தகைய பிரச்சனைகள் சமகால அளவீடுகளது கண்டறியப்பட்டவைகளினை அடிப்படையாகக் கொண்டு சுட்டெண்ணினை கணிப்பதில் உள்ளடக்கப்படும் விடயங்கள், பொருத்தமான நிறைகள் போன்றவற்றில் கிரமமான திருத்தங்களினை மேற்கொள்வதனூடாக வழக்கமாக தீர்த்துக் கொள்ளப்படுகின்றன. நுகர்வோர் விலைச்சுட்டெண்களை தயாரிக்கின்ற புள்ளிவிபரவியல் முகவர்கள் வழக்கமாக தொடர்புபட்ட விலைச்சுட்டெண்களில் ஒவ்வொரு விடயத்திற்குமான நிறைகளை மீள அடிப்படைப்படுத்துவதற்கு வழமையாக திருத்த அட்டவணைகளினைக் கொண்டிருக்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நிறை ஒவ்வொரு மற்றைய ஆண்டிலும் திருத்தப்படுகின்ற வேளையில் ஐக்கிய இராச்சியத்தில் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணும் சில்லறை விலைச்சுட்டெண்ணும் ஆண்டு தோறும் திருத்தப்படுகின்றன. ஏனைய அநேகமான நாடுகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நிறைகள் 5 ஆண்டுகளில் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது மீள் அடிப்படையிடப்படுகின்றது. இலங்கையில் அலுவல்சார் சுட்டெண்ணிற்காக ஒரு முறையான திருத்த அட்டவணை அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் காலத்துக்குக் காலம் நிறைகளில் திருத்தம் செய்துள்ளது. அண்மைய கால முக்கிய திருத்தம் 1995இல் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நாடுகளது நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் திருத்த அட்டவணைகள அட்டவணை சி 5.2இல் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது

சிறப்புக் குறிப்பு 5 (தொடர்ச்சி)

பணவீக்கத்தினை சிறந்த முறையில் காட்டும் அளவிடலொன்றிற்கான தேவை



**அட்டவணை சி. 5.2**
**அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் நாடுகளுக்கிடையிலான ஒப்பீடு**

| நாடு | விலைச் சுட்டெண் | பொறுப்பான நிறுவனம் | உள்ளடக்கம் | திருத்த அட்டவணை |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | நுகர்வோர் விலைச் சுட்டெண் | தொழிலாளர் புள்ளிவிபரவியல் பணியகம் | ஒவ்வொரு மாதமும் ஏறத்தாள 23,000 நிலையங்களிலிருந்து 80,000 விலைக் கோரல்கள் பெறப்படுகின்றன. | கடந்த காலங்களில் ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் நிறைகள் திருத்தப்பட்டன. 2002 முதல் ஒவ்வொரு அடுத்து வரும் ஆண்டுகளிலும் நிறைகள் திருத்தப்பட்டன. சந்தைக் கூடையானது இறுதியாக 2002இல் திருத்தப்பட்டது. |
| ஐக்கிய இராச்சியம் | சில்லறை விலைச் சுட்டெண் | மத்திய புள்ளி விபரவியல் அலு வலகம் | நாடு முழுவதும் 150 பிரதேசங்களில் 20,000 நிலையங்களில் விலை அசைவுகள் அளவிடப்படுகின்றன. | எல்லா நிறைகளும் பொருட்கள் மற்றும் சேவைகளின் கூடைகளும் ஒவ்வொரு வருடமும் பூரணப்படுத்தப்படுகின்றன. |
| பிரான்ஸ் | நுகர்வோர் விலைச்சுட்டெண் | புள்ளிவிபரவியல் மற்றும் பொருளாதார சந்தைகளுக்கான தேசிய நிறுவனம் | பிரான்சின் முக்கிய பிரதேசத்திலுள்ள எல்லா நகரங்களையும் 2000 இற்கு அதிகமான குடித்தொகையைக் கொண்ட வெளிநாட்டு திணைக்களங்களையும் உள்ளடக்குகிறது. | இத்தகைய குழுக்களுக்கான நிறையிடலானது முன்னைய வருடத்தின் தேசிய கணக்குகளின் இறுதி நுகர்வு தரவிலிருந்து பெறப்படுகின்றது. |
| கனடா | நுகர்வோர் விலைச் சுட்டெண் | கனடா புள்ளிவிபரவியல் | சுட்டெண்ணானது கனடாவின் எல்லா மாகாணங்களையும் எல்லை நகரங்களையும் உள்ளடக்குகின்றது. | நிறைகள் பொதுவாக 4 ஆண்டுகளுக் கொரு முறை திருத்தப்படுவதுடன் சுட்டெண்ணானது ஏறத்தாள ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் மீள அடிப்படையிடப் படுகிறது. |
| சேர்மனி | நுகர்வோர் விலைச் சுட்டெண் | சமஸ்டி அரசு மற்றும் பிராந்திய அரசாங்கங்களின் புள்ளிவிபரவியல் முகவராண்மை | சேர்மனி முழுவதிலுள்ள 190 மாநகரங்களிலுள்ள ஏறத்தாள 40,000 சில்லறை நிலையங்களிலிருந்து விலைகள் சேகரிக்கப்படுகின்றன. | ஒவ்வொரு 5 வருட கால இடை வெளிகளிலும் சுட்டெண்ணின் பயன் படுத்தப்பட்ட நிறைகள் திருத்தப் படுகின்றன. |
| யப்பான் | நுகர்வோர் விலைச் சுட்டெண் | யப்பானின் புள்ளிவிபரவியல் பணியகம் | எல்லா மாவட்டங்களும் முக்கிய நகர்ப்புறங்களையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | தற்பொழுது நு.வி.சுட்டெண்ணில் அடிப்படை ஆண்டாக 2005 காணப் படுகின்றது. இது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளிலும் திருத்தப்படுகின்றது. இந்த அடிப்படைத் திருத்தத்துடன் நு.வி. சுட்டெண்ணிற்கான விடயங்களும் நிறைகளும் மீளாய்வு செய்யப்படுகின்றன. |
| கொரியா | நுகர்வோர் விலைச் சுட்டெண் | தேசிய புள்ளிவிபரவியல் அலுவலகம் | கொரியாவின் மொத்த நகர குடித்தொகையில் 82 சதவீதத்தை உள்ளடக்குகின்ற 36 நகரங்களினை உள்ளடக்குகின்றது. | ஐந்து ஆண்டுகால இடைவெளிகளில் சுட்டெண் மீள அடிப்படையிடப்படுவதுடன் நிறைகள் மாற்றம் செய்யப்படுகின்றன. |
| சிங்கப்பூர் | நுகர்வோர் விலைச் சுட்டெண் | புள்ளிவிபரவியல் திணைக்களம் | 2,410 நிலையங்களிலிருந்து 33,400 விலைக்கோரல்கள் சேகரிக்கப்படுகின்றன. | நிறையிடல் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளிலும் பூரணப்படுத்தப்படுகின்றது. |
| அவுத்திரேலியா | நுகர்வோர் விலைச் சுட்டெண் | புள்ளிவிபரவியல் திணைக்களம் | எல்லா முக்கிய நகரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | முக்கிய அடித்தள அளவுக்குறியீட்டுத் திருத்தங்கள் ஒவ்வொரு 5 ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. |

**சிறப்புக் குறிப்பு 5 (தொடர்ச்சி)**

**பணவீக்கத்தினை சிறந்த முறையில் காட்டும் அளவிடலொன்றிற்கான தேவை**

| | | | | |
|---|---|---|---|---|
| மலேசியா | நுகர்வோர் விலைச் சுட்டெண் | புள்ளிவிபரவியல் திணைக்களம் | நாடு முழுவதிலுள்ள ஏறத்தாள 19,000 சில்லறை நிலையங்களிலிருந்து ஏறத்தாள 190,000 விலைக்கோரல்கள் ஒவ்வொரு மாதமும் பெறப்படுகின்றன. | நிறைகள் சாதாரணமாக ஒவ்வொரு 5 ஆண்டுகளிலும் திருத்தப்படுகின்றன. நிறைகளிலான திருத்தத்திற்கமைய சுட்டெண்ணானது சாதாரணமாக ஒவ்வொரு 5 வருடங்களிலும் மீள அடிப்படையிடப்படுகிறது. |
| சீனா | நுகர்வோர் விலைச் சுட்டெண் | அரச புள்ளிவிபரவியல் | 80 மாகாணங்களையும் 146 நகரங்களையும் உள்ளடக்கியதாக நாடு முழுவதிலுமாக ஏறத்தாள 226 பிரதேசங்கள் உள்ளடக்கப்படுகின்றன. | விடயங்களின் பட்டியலானது ஆண்டு தோறும் திருத்தப்படுகின்றது. |
| இந்தியா | மொத்த விலைச் சுட்டெண் | பொருளாதார ஆலோசகரது அலுவலகம் | தொழிற்சாலை மற்றும் சுரங்க விலைகள் நேரடியாக திரட்டப்படுகின்றன. பெரும்பாலான வேளாண்மை விலைகள் முதலாந்தர சந்தையிலிருந்து திரட்டப்படுகின்றன. | அடிப்படை ஆண்டானது ஒவ்வொரு 5 வருடமும் 10 ஆண்டுகளுக்கு மேற்படாமல் திருத்தப்படுகின்றது. |
| பாகித்தான் | நுகர்வோர் விலைச் சுட்டெண் | புள்ளிவிபரவியல் | மொத்தக் குடித்தொகையில் ஏறத்தாள 68% இனை பிரதிபலிக்கும் 35 நகர நிலையங்களை (பாரிய, நடுத்தர மற்றும் சிறிய) உள்ளடக்குகின்றது. | தற்போதைய அடிப்படை ஆண்டு 2000/2001 |
| தாய்லாந்து | நுகர்வோர் விலைச் சுட்டெண் | வர்த்தக மற்றும் பொருளாதாரச் சுட்டெண்கள் பணியகம் | பாங்கொக் நகரப்பகுதிகள் மற்றும் ஏனைய பட்டணப் பிரதேசங்களை உள்ளடக்கி மொத்தமான 1,535 நிறுவனங்களிடமிருந்து ஏறத்தாள 65000 விலைகள் சேகரிக்கப்படுகின்றன. | சுட்டெண்ணானது பொதுவாக ஒவ்வொரு நான்கு ஆண்டுகளிலும் மீள அடிப்படையிடப்படுகிறது. |
| இலங்கை | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் | குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | புவியியல் உள்ளடக்கமானது கொழும்பு மாநகர பிரதேசத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது | 1952 இலிருந்த அடிப்படையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை. நிறைகளுக்கான திருத்த அட்டவணை குறிப்பிடப்படவில்லை |

மூலம்: தொடர்பான புள்ளிவிபரவியல் முகவர்கள்

இலங்கையில் அலுவல்சார் பணவீக்க அளவீடானது நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடுகளின் கண்டறியப் பட்டவைகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு நாட்டின் உண்மையான வாழ்க்கைச் செலவினை பிரதிபலிக்காததாக அதிகளவில மாறி வருவதனால் பன்னாட்டு சிறந்த பிரயோகங்களினை இலங்கையும் பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது. அதேவேளை, தற்போதைய அலுவல்சார் சுட்டெண்ணினைப் பிரதியீடு செய்வதற்கு பொருத்தமானதாக எந்தவொரு ஏனைய விலைச் சுட்டெண்களும் கிடைக்கத்தக்கதாக இருக்கவில்லை. எனவே, சமகால நுகர்வோர் அளவீடுகளின் கண்டறியப்பட்டவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய விலைச் சுட்டெண்ணை அறிமுகப்படுத்துவதற்கும் அதனை பணவீக்கத்தின் அலுவல்சார் அளவீடாக கையாளுவதற்குமான தக்க தருணம் இதுவாகும்.

**உசாத்துணை**


நுகர்வோர் விலைச்சுட்டெண் கையேடு: கோட்பாடு மற்றும் பிரயோகமும் (2004), பன்னாட்டு தொழிலாளர் அலுவலகம், ஜெனிவா, ஒகத்து 2004.

இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (2006), "குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவின அளவீடு 2005 - கண்டறியப்பட்டவற்றின் தொகுப்பு", ISSN 1391 - 4693, ஒத்தோபர் 2005, www.statistics.gov.lk இலும் கிடைக்கக்கூடியதாக உள்ளது.